விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 307 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 05 ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## காங்கேசன்துறை - தூத்துக்குடி கப்பல் சேவை விரைவில்

### இராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரியிலிருந்து கொழும்புக்கு கப்பல் சேவையை முன்னெடுக்க பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் - தூத்துக்குடிக்கும் இடையில் விரைவில் பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்கப்பட வுள்ளது.

தொடர்ந்து இராமேஸ்வரம் தூத்துக்குடி, கன்னியாகுமரிக்கு இடையே கொழும்பிலிருந்து பயணிகள் கப்பல் சேவை முன்னெடுக்க பேச்சு வார்த்தை நடத்தப் 19

## யாழ்.போதனாவில் கொல்லப்பட்டவர்களுக்கு

### முற்றவெளி இசை நிகழ்ச்சியில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று இடம் பெற்ற தென்னிந்திய இசைய மைப்பாளர் சந்தோஷ் நாரா யணனின் இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யில் இந்திய இராணுவத்தின ரால் கொல்லப்பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. 19

## நவம்பர் 13 பட்ஜெட்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத் திட்டம் நவம்பர் 13ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

(ம-7)

# அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்

### பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்து நடைபெறும் – ரணில்



(கொழும்பு)

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடை பெறும். தொடர்ந்து பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## பேக்கரி பொருட்களின் விலைகள் அதிகரிப்பு?

(கொழும்பு)

எரிபொருள், எரிவாயு அல்லது மின்சாரக் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டால், பேக்கரி உற்பத்திப் பொருட் களின் விலையை அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி 19

## அமெரிக்காவில் வேலை வாங்கித் தருவதாக பண மோசடி

### யாழில் இராணுவ மேஜர் கைது

(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவுக்கு அனுப்பி அங்கு வேலை வாங்கித் தருவ தாக பண மோசடி செய்த இரா ணுவ மேஜர் ஒருவர் யாழ்ப் பாணத்தில் கைது செய்யப்பட் டுள்ளார்.

மேலும் பண மோசடி குற் றச்சாட்டில் சந்தேகநபருடைய மனைவியும் கைது செய்யப்பட் டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய மேஜர் யாழ்ப்பாணம், எழுது மட்டுவாழில் உள்ள 19

## நாளாந்தம் எரிபொருள் திருத்தம் அடுத்த வருடம் முதல் அமுல்

### எரிசக்தி அமைச்சர் மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது முன்னெடுக்கப் படும் மாதாந்த விலைத் திருத்தத் திற்கு பதிலாக, அடுத்த வருடம் முதல் நாளாந்தம் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள் ளப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிரப்பு 19

### காஸா தாக்குதலைக் கண்டிப்பவர்கள்

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலை தாக்குதல் குறித்து பேசுவதில்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

காஸாவில் வைத்தியசாலை மீதான தாக்குதலை கண்டிப் பவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்கு தல் நடத்தியமை தொடர்பில் எதுவும் கதைக்கவில்லை என பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் 19

## முல்லையில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முறிகண்டி செல்வபுரம் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய கதிரவேலு லட்சுமணன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையே ஸ்தலத் தில் உயிரிழந்துள்ளதுடன், 19



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- நன்னீர் ஊற்று.
- தரகர் தேவையில்லை

தொடர்பு

**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**

(17548)

24.10.2023 (விஜயதசமி) புதிய பிரிவுகள் ஆரம்பம்!

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்**

கேக் வகைகள், ஐசிங், Hair Dressing, Beautician (Facial), மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும்முறை, Cookery: மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், Ice cream தயாரித்தல் சனி, ஞாயிறு, கிழமை நாள் பிரிவுகள் நடைபெறும்.

(C-7462) 0777110383 0742170383

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7460)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## SKYLINE WATER PROOFING

**நீர்க்கசிவில் இருந்து தீர்வு வேண்டுமா?**

சிறந்த இரசாயனப் பொருட்களினால் உத்தரவாதத் துடன் உங்கள் கடைகள், கோவில்கள், வில்லு மண்டபங்கள், முகட்டுக் கூரைகள், குளியலறைகள் என்பவற்றில் உள்ள நீர்க்கசிவுப் பிரச்சினைகளை தடுப்பதற்கு இன்றே கீழ்காணும் தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்.

(இரசாயனப் பொருட்களையும் சிறந்த விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள முடியும்)

Skyline Holders (Pvt) ltd
No. 89, Old Park Road, Jaffna.
077 722 0095 / 076 663 6481
021 221 4994
www.skylineholders.com
Skylineholders2021@gmail.com

(17541)

## புலமை கல்வி நிறுவனம்

சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

**மாணவர்களுக்கான புலமைப்பரிசில்**

**புதிய வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பம்**

ஆசிரியர் திரு. க.கலாமோகன்
B.A, P.G.D.E, Dip.in.teach

காலம் : 24.10.2023(செவ்வாய்க்கிழமை)
நேரம் : தரம் - 5 மாலை 4.00 மணி
(தற்போது தரம் 4)
தரம் - 4 மாலை 4.31 மணி
(தற்போது தரம் 3)

தொ.பே.இல. : 077 212 1915
சோதி வேம்படி லேன், மானிப்பாய்.

குறிப்பு : பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன ஆகவே பதிவுகளுக்கு முந்தவும்.

(17543)

## அகரம்

**உயர்நிலைக் கல்லூரி**
**AHARAM HIGH STANDARD COLLEGE**
காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**புதிய கல்வி ஆண்டு -2024**

**புதிய தரம் 06**

தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்களிற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

2024 தரம் 06 இற்கான நாள் வகுப்புக்கள் விஜயதசமி நன்னாள் அன்று ஆரம்பிக்கப்படும்.

24.10.2023 காலை 10.30 - 12.00 வரை

'அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்'


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 24.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி



## அமரர் தங்கவேலு பாக்கியம்

பிறப்பு: 14.01.1939 இறப்பு: 24.09.2023

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று 22.10.2023 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியள வில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத் தியக் கிரியைகள் எதிர்வரும் 24.10.2023ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன் னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத் தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

இல.30, குடியிருப்பு,
வவுனியா.

இங்ஙனம் :- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு :- 076 450 7172

(17544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு சுயாட்சி வழங்குவதை சிங்களவர்கள் அங்கீகரிக்க வேண்டும்

## சபையில் மனோ எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

**பாலஸ்தீனத்துக்கு அனுதாபம் தெரிவிப்பது உண்மையாக இருந்தால் இலங்கைக்குள் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்குவதை சிங்களவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல், பூகோள தாக்கம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"இந்தச் சந்தர்ப்பத்திலே, காசாவில்,மேற்குக் கரையில் நிகழக்கூடிய அடாவடி யுத்தத்தால், சண்டையால், சச்சரவால் உயிர்களை இழந்து, அவயங்களை இழந்து துன்பப்படும் அப்பாவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.அதேபோல், காசாவில் இருந்து போராளிகளால் தாக்கப்பட்ட, உயிர்களை இழந்து, அவயங்களை இழந்த இஸ்ரேலின் தென்பகுதியில் வாழும் மக்களுக்கும் கடத்தப்பட்ட மக்களின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காசாவில் மருத்துவமனை, பாடசாலை, மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகள் விழுந்தன.

இதேதான் இலங்கையிலும் நிகழ்ந்தது. வடக்கு - கிழக்கில் யுத்தத்தின் போது,மருத்துவமனைகள் , மக்கள் குடியிருப்புகள், பாடசாலைகள் மீதும் குண்டுகள் விழுந்தன.

இவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஐ.நா சபையாக இருக்கலாம் அல்லது ஐ.நா மனித உரிமை ஆணையகமாக இருக்கலாம் அவர்கள் பல்லில்லாத பாம்புகளாக இருக்கின்றார்கள்.

பாலஸ்தீன பிரச்சினைக்குத் தீர்வாக இன்று, இரண்டு நாடுகள் என்ற தீர்வு இருக்க வேண்டும் என நாம் கூறுகின்றோம். 1967ஆம் ஆண்டுக்கு முன் இருந்த நிலப்பகுதிக்கு இஸ்ரேல் வாபஸ் வாங்க வேண்டும். கிழக்கு ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு சுதந்திர பாலஸ்தீன நாடு உருவாக வேண்டும். அதை இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும்.

அதேபோல், இஸ்ரேல் நாட்டையும் இருப்பையும் பாலஸ்தீன நாடு அங்கீகரிக்க வேண்டும். இதுதான் அங்கே தீர்வு.

இலங்கையிலும் மீண்டும் யுத்தம் நிகழ வேண்டாம் என்றால், பிரச்சினை தீர வேண்டும், சிங்களவர்களும் தமிழர்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால் பாலஸ்தீனத்துக்கு ஒரு நியாயம். இலங்கைக்கு வேறு நியாயம் இருக்க முடியாது.

ஆகவே, ஒரே இலங்கைக்குள் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்குவதை சிங்களவர்கள் அங்கீகரிக்க வேண்டும். இங்கே வந்து பாலஸ்தீனத்துக்கு அனுதாபம் தெரிவிப்பது உண்மையாக இருந்தால் இதை நீங்கள் செய்ய வேண்டும். அதுதான் நியாயம் எனவும் தெரிவித்தார். (நி)

# யாழ்.பல்கலை பேராசிரியர்கள் சிறந்த விஞ்ஞானிகளாக தெரிவு




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஸ்டான் போர்ட் பல்கலைக்கழகமும் Elsevier நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ள உலகின் சிறந்த 2 வீத விஞ்ஞானிகளின் தரவரிசையில் முப்பத்தெட்டு இலங்கை விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் இலங்கையிலிருந்து உள்ளடக்கப்பட்டிருப்போரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான பேராசிரியர் நவரட்ணராஜா சதிபரன்,கலாநிதி ரி.மதனரஞ்சன் ஆகிய இருவரும் இடம்பெற்றுள்ளனர்.

பணிநாள் மற்றும் வருடாந்த அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பல்வேறு காரணிகளைக் கொண்டு தரவரிசைப் படுத்தி இந்தப் பட்டியல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

22 அறிவியல் துறைகள் மற்றும் 176 துணைத்துறைகளில் இருந்து விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பட்டியலில் இணைக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-33)

### சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதம் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் கடந்த ஆண்டை விட 97.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

இந்த வருடத்தின் வருமானம் 478.7 பில்லியன் ரூபா என இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் நாட்டின் சுற்றுலா வருமானம் 242.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியது. (நி)

# யாழ்.போதனாவில் இந்திய இராணுவத்தின் அட்டூழியம்;

## படுகொலை செய்யப்பட்ட பணியாளர்களின் நினைவேந்தல்







(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை பணியாளர்களின் 36 ஆவது நினைவுதினம் நேற்று நினைவுகூரப்பட்டது.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியசாலைப் பணியாளர்கள் 21 பேர் உள்ளிட்ட, 68 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டதுடன் பலரும் காயமடைந்தனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் 36 ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நினைவுகூரப்பட்டது.

குறித்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், சுட்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தனர். குறித்த நினைவேந்தலில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தோருக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது. (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிக் கணக்கை ஆரம்பித்தது இலங்கை




உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தனது முதல் வெற்றியை பதிவுசெய்துள்ளது.

2023 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 19ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

நேற்றைய போட்டியில் இலங்கை மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 262 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக சைப்ரண்ட் ஏங்கல்பிரெக்ட் 70 ஓட்டங்களையும், லோகன் வென் பீக் 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில், இலங்கை அணியின் தில்ஷான் மதுஷங்க 48 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், கசுன் ராஜித்த 50 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தநிலையில், 263 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 48.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக, சதீர சமரவிக்ரம 91 ஓட்டங்களையும், பெத்தும் நிஸ்ஸங்க 54 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், நெதர்லாந்து அணியின் ஆர்யன் தத் 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக சதீர விக்ரம தெரிவானார். (ம-7)

## கிளாசன் அதிரடி சதம்

# நடப்பு சம்பியன் இங்கிலாந்தை அடித்து துவைத்த தென்னாபிரிக்கா



கிளாசனின் அதிரடி சதம் மூலம் நடப்பு சம்பியன் இங்கிலாந்தை அடித்து துவைத்தது தென்னாபிரிக்கா.

உலகக்கிண்ண நேற்றைய போட்டியில் இங்கிலாந்து மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின.

டாஸ் வென்ற இங்கிலாந்து அணி முதலில் பந்துவீச முடிவு செய்தது.

அதன்படி பேட்டிங் ஆடிய தென் ஆபிரிக்கா அணி 50 ஓவர்கள் முடிவில் 399 ரன்களை குவித்தது. தென் ஆபிரிக்கா அணியின் கிளாசன் அதிரடியாக ஆடி சதம் விளாசினார்.

400 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது

இங்கிலாந்து அணியின் டாப் ஆர்டர் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். கடைசியில் சிறப்பாக ஆடிய அட்கின்சன் மற்றும் மார்க் வுட் முறையே 35 மற்றும் 43 ரன்களை எடுத்தனர்.

அட்கின்சன் 35 ரன்களில் ஆட்டமிழக்க, 22 ஓவர்களில் இங்கிலாந்து அணி 170 ரன்களில் 9 விக்கெட்டுகளை இழந்தது. மார்க் வுட் ஆட்டமிழக்காமல் 43 ரன்களை குவித்து இருந்தார். அடுத்து களமிறங்க வேண்டிய ரீஸ் டோப்லி பட்டிங் ஆடவில்லை. இதன் காரணமாக தென் ஆப்பிரிக்கா அணி 229 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தென் ஆப்பிரிக்கா சார்பில் சிறப்பாக பந்து வீசிய ஜெரால்ட் கோட்ஸி மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

லுங்கி நிகிடி, மார்கோ ஜான்சன் தலா இரண்டு விக்கெட்டுகளையும், ககிசோ ரபாடா மற்றும் கேசவ் மகராஜ் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் விளாசிய கிளாசன் தெரிவானார். (ம-7)


## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு கணிதம், தமிழ், ஆங்கிலம், வரலாறு(6-11) கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

(C-7463) நிர்வாகி

021 791 7791
077 087 2903

## பணிப் பெண் தேவை

யாழ் நகரில் 05 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 35 - 60 வயதிற்குட்பட்ட தங்கி நின்று சமையல் வேலை செய்யக்கூடிய பெண் வேலையாள் தேவை.

சம்பளம் - 45,000/= (17551)

075 498 5400
077 937 0000
075 988 1000

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 264/= | (max3Kg) |
| 1 Kg அவல் | - 259/= | |
| 1 Kg சர்க்கரை | - 289/= | |
| 1 Kg கடலை | - 535/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 175/= | |
| 1 Kg கோதுமை மா | - 179/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 187/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 289/= | (max 3Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 435/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 400 g அங்கர் பால்மா | - 1030/= | ~~(1080/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/=)~~ |
| 70g Baby Soap | - 108/= | ~~(145/=)~~ |
| 1 மங்களம் ஊதுபத்தி | - 160/= | ~~(200/=)~~ |

1030/=




~~1080/-~~

(17549)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## ஆங்கில வகுப்புக்கள்

Grade 3 - Grade 11 வரை
வரும் விஜயதசமி தினத்தில்
(24.10.2023 செவ்வாய்)
மாலை 3 மணிக்கு
நல்லூரில் ஆரம்பம் (17550)

077 711 5596
076 698 9807

## வாடகைக்கு

A/L படிக்கும் மாணவிகளிற்கு யாழ் சயன்ஸ் கோல், சயன்ஸ் வேல்ட், ரியூசன் நிலையங்களிற்கு அருகில் அறைகள் வாடகைக்கு உண்டு. (17546)

076 387 1033


## அடுத்த...

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்ரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் சாத்தியமாகும் பட்சத்தில் மாகாண சபைத் தேர்தலையும் 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடத்தப்படும் என்றார்.

தேர்தல்முறை மறுசீரமைப்பு யோசனை ஊடாக ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் முயற்சிகள் எடுத்து வருவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுவரும் பின்புலத்திலேயே ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டில் மட்டும்
# சுமார் 5 லட்சம் பேர் வேலையிழப்பு
## ஆய்வில் தகவல்

**(கொழும்பு)** இலங்கையில் ஏறக்குறைய 2000 தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்கள் மூடப்பட்டதன் காரணமாக கடந்த ஆண்டு 5 இலட்சத்து 33 ஆயிரத்து 858 பேர் வேலையை இழந்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.




அதன்படி, இவ்வாறு வேலையை இழந்தவர்களுள் தொழில்துறையைச் சேர்ந்த 3 இலட்சத்து 96 ஆயிரத்து 159 பேரும் சேவைத் துறையில் 1 இலட்சத்து 37ஆயிரத்து 699 பேரும் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த வருடத்தில் தனிநபர்களின் வேலை நேரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளதாக அறிக்கைகள் சுட்டிக்காட்டுவதாக பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

தொழிற்சாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்களாக மூலப்பொருட்களின் விலை உயர்வு, மின் கட்டணம் உயர்வு, எரிபொருள் விலை உயர்வு போன்றவற்றை நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யாழ்ப்பாணம் வந்தடைந்த ஆதிவாசிகள்



0

மஹியங்கனையில் வசித்துவரும் ஆதிவாசிகள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்துள்ளனர். ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையிலான சுமார் 100 இற்கு மேற்பட்ட ஆதிவாசிகள் குழுவினரே வருகை தந்துள்ளனர். (நி-33)


SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෛ ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

**திருக்குறள் பாவோதல் போட்டி - 2023**

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் என்பன வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும்.
விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மாட்(Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

தொடர்புகளுக்கு 0767427596

(இ)

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், பனுவல் Book Mart | ஊடக அனுசரணை "வலம்புரி" | நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126



# நினைவஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொருளாளர் திரு.தி.கோகிலதாஸ் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். திருச்செல்வம் உருத்திரமணிதேவி



அவர்களின் 31 ஆம் நாள் நினைவுநாளில் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்


# இராசிபலன்

22.10.2023
ஐப்பசி 05, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பிற்பகல் 5.43 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 5.15 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சந்திராஷ்டமம்- திருவாதிரை,புனர்பூசம்.

**வளவன்**



மேஷம்

தொலைபேசி வழியில் செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய சித்தியுண்டு.



ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உடல்நலனில் இருந்த பாதிப்புகள் குறையும், பயணங்கள் கைகூடும்.



மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, உடல்நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.



கடகம்

வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆதரவு பெருகும் நாள்.



சிம்மம்

இல்லத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



கன்னி

உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள்.



துலாம்

நம்பி வந்தவர்களுக்கு உதவும் வாய்ப்புண்டு, வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



விருச்சிகம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.



தனுசு

நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு, நண்பர்கள் சந்திப்பு இடம்பெறலாம்.



மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பெரியவர்களின் சந்திப்பால் சில நன்மைகள் நடைபெறலாம், உடல்நலன் சீராகும், கற்பனை மிகுதியான நாள்.



கும்பம்

சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், சோம்பலைத் தவிர்ப்பது நல்லது, சயனசுகக் குறைவான நாள்.



மீனம்

வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், காரிய அனுகூலமுண்டு.

விருப்பமுள்ளவனை விதி அழைத்துச் செல்லும், பிடிக்காதவனை விரட்டிச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி தின பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு காளியம்மன் தேவஸ்தான நவராத்திரி தின பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு த.பிரணவன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ, வணிகக்கற்கைகள் பீட பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக இணுவில் அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் பண்டிதர் செ.த.குமரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி)

# யாழ். சர்வதேச விமான நிலையத்தில் அடிப்படை வசதிகள் குறைவு

## சீர்செய்து தருமாறு பயணிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆரம்பித்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதிலும் உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வசதிகள் பெரியளவில் ஏற்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு காணப்படுகிறது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக இந்தியா மற்றும் கொழும்பு இடையேயான பயணிகள் சேவைகள் இடம்பெற்று வருவதுடன் பெருமளவானவர்கள் இதனூடாகவே பயணம் செய்கின்றனர்.

தற்போதைய இந்த விமான நிலையத்தில் விமானம் ஊடாக வருபவர்களை அழைத்து வர செல்பவர்கள் காத்திருப்பதற்கான இடம் மரநிழலேயாகும். மரங்களுக்கு கீழே கல்லாசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அவை பாதிப்பை ஏற்படுத்தாது. ஆனால் மாரி காலத்தில் மழை பெய்தால் கல்லாசனங்களில் இருக்க முடியாது பெரும் சிரமத்திற்கு ஆளாகுவர்.

குறிப்பாக பயணிகள் குடிவரவு, குடியகல்வு செயற்பாடுகளை முடித்து விட்டு காத்திருப்பிற்கான போதிய இடம் இல்லாமல் அவர்களும் இதே பிரச்சினைக்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறான நிலையில் ஒரு சில உட்கட்டுமான அடிப்படை வசதிகளையாவது ஏற்படுத்துவது பயணிகள் மற்றும் விமான நிலையத்திற்கு வருபவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-33)

## தென்மராட்சியில் கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன்புலோ பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு கிலோ 220கிராம் கஞ்சாவுடன் விசேட அதிரடிப்படையினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நாவற்குழி மற்றும் கைதடிப் பிரதேசங்களைச் சேர்ந்த இருவர் கைதாகியுள்ளனர்.

கஞ்சா பொதிகளுடன் கைதான சந்தேகநபர்களை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)



பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலை மாணவர்களின் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்தினம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)


யா/வட இந்து ஆரம்பப் பாடசாலையில் சரஸ்வதி சிலை திறப்பு விழாவும் வாணி விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் பா.யசிதரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் த.ரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.(நி-60)



கவிஞர் இரா.ஜெயக்குமாரின் "இன்னும் எத்தனை காலமோ?" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா, அண்மையில் உரும்பிராய் அருள்மிகு கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்ட போது...

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2945

வைசாலினி




நித்தியா




உமாவதனி




தர்சிகன்




அபிசன்




சிந்துஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 411
Viber 076 636 3378



# இது பாலஸ்தீன முள்ளிவாய்க்கால்!

**இலங்கை இறுதி யுத்தத்தில் கடைசி நாளில் முள்ளிவாய் க்காலில் இலங்கை இராணுவத்தின்கொடூரத் தாக்குதலை ஒரு சிறிய துண்டு நிலத்தில் நம் உறவுகள் எதிர்கொள்ள நேர்ந்தது. அந்தத் துயரத்துக்குச்சற்றும் குறை வில்லாத ஒன்று இப்போது காஸாவில் நிகழ்கிறது.**


அது ஒரு துண்டு நிலம்... மத்தியதரைக் கடலுக்கும் இஸ்ரே லுக்கும் இடையே நீள்செவ்வக வடிவில் இருக்கும் துண்டு நிலம். காஸா என்று அழைக்கப்படும் அந்தப் பிரதேசத்தின் மீது உலகின் கவனம் இப்போது குவிந் திருக்கிறது. வெறும் 365 சதுர கிலோ மீற்றர் பரப்பு கொண்ட இந்த வெப்பப் பிர தேசத்தில் சுமார் 20 லட்சம் பாலஸ் தீனர்கள் வசிக்கிறார்கள். பெரும்பாலும் அரபு முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களும் சிலர் இருக்கிறார்கள். உலகிலேயே மக்கள் மிகுந்த நெரிசலாக வாழும் மூன்றாவது பிரதேசம் இது.

இலங்கை இறுதி யுத்தத்தில் கடைசி நாளில் முள்ளிவாய்க்காலில் இலங்கை ராணுவத்தின் கொடூரத் தாக்குதலை ஒரு சிறிய துண்டு நிலத்தில் நம் உறவுகள் எதிர்கொள்ள நேர்ந்தது. அந்தத் துயரத் துக்குச் சற்றும் குறைவில்லாத ஒன்று இப்போது காஸாவில் நிகழ்கிறது. உலகின் வலிமையான இராணுவங்களில் ஒன்றாகக் கருதப்படும் இஸ்ரேல் ஈவு இரக்கமின்றி நடத்தும் தாக்குதலில் காஸா நொறுங்கிக் கிடக்கிறது. இஸ்ரேல் முறைப்படி தரை வழித் தாக்கு தலைத் தொடங்குவதற்கு முன்பாகவே காஸாவில் 2,750 பேர் இறந்திருக்கிறார்கள். 10,000 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

பெண்கள், குழந்தைகள் உட்பட சுமார் 20 லட்சம் பேர் வாழும் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையைக் கற்பனை செய்து பாருங்கள். அதுதான் காஸா. எந்தப் பக்கமும் வெளியேற முடியாமல், தடுப்புகளால் சூழப்பட்ட பெருநிலம். "இறந்தவர்களின் சடலங் களைப் பத்திரமாக வைக்கக்கூட எங்களிடம் பிண வறைகள் இல்லை. ஐஸ் கொட்டிய லாரிகளில் சடலங்களைப் போட்டு வைத்திருக்கிறோம்" என்று இறைஞ்சும் இவர்களின் குரல் யார் காதுகளிலும் விழவில்லை. காஸாவுக்கான உலக சுகாதார நிறு வனத்தின் வட்டார இயக்குநர் அகமது அல் மந்தாரி, "குறைந்தபட்சம் மருந்துகளையும் தண்ணீரையுமாவது உள்ளே கொண்டுவர அனுமதியுங்கள்" என்று மன்றாடுகிறார். "அடுத்த 24 மணிநேரத்துக்கான தண்ணீர், மின்சாரம், எரிபொருள் மட்டுமே எஞ்சியிருக்கிறது. இவையெல்லாம் தீர்ந்துபோனால், போர் நடத்தாமலே இங்கு நிறைய பேர் செத்துப் போவார்கள். மருத்துவமனைகளில் இருக்கும் எல்லா நோயாளிகளுக்கும் இறப்புச் சான்றிதழ் தருவதைத் தவிர டாக்டர்களுக்கு வேறு வேலை இருக்காது" என்கிறார் அவர்.

இந்த எல்லாவற்றுக்கும் தொடக்கப்புள்ளி, ஹமாஸ் நடத்திய ஒரு தாக்குதல். ஒரு தீவிரவாத அமைப்பாக உலகின் பல நாடுகளில் தடை செய்யப்பட்ட ஹமாஸ் இயக்கம், காஸா பகுதியின் ஆட்சியாளர்களாக அமைந்தது அந்த மக்களின் துரதிர்ஷ்டம்தான்.

யூதர்களுக்காக இஸ்ரேல் நாடு உருவாக்கப்பட்ட புதிதில் ஜோர்டான், எகிப்து என அண்டை நாடுகளுடன் அது போரிட்டுப் பெரும் நிலப்பரப்புகளைப் பிடித்தது. இவற்றில் பாலஸ்தீனர்களின் நிலங்களாகக் கருதப்பட்டவை, ஜோர்டான் நதியின் மேற்கில் இருக்கும் மேற்குக்கரை, இஸ்லாமியர்களின் புனிதமான அல் அக்ஸா மசூதி இருக்கும் கிழக்கு ஜெருசலேம் மற்றும் காஸா நிலப்பரப்பு ஆகிய மூன்றும்தான். ஆனால், இந்த மூன்று நிலப்பரப்புகளிலுமே யூதக் குடியிருப்புகளை வலுக்கட்டாயமாக இஸ்ரேல் அமைத்து வந்தது. இப்படிப்பட்ட சூழலில் 1993 ஆம் ஆண்டு ஆஸ்லோ அமைதி ஒப்பந்தப்படி மேற்குக்கரையிலும் காஸா முனையிலும் பாலஸ்தீனர்களின் சுயாட்சிக்கு இஸ்ரேல் சம்மதம் தெரிவித்தது. (அப்போதுகூட அது ஜெருசலேமை விட்டுத்தரவில்லை) இராணுவம், விமானப் போக்குவரத்து போன்ற முக்கியமான துறைகள் அத்தனையும் இஸ்ரேல் வசம் இருக்க, உள்ளாட்சி நிர்வாகம் போன்ற சில துறைகளில் மட்டும் பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சி தரப்பட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசியல் பிரிவான ஃபதா என்ற கட்சி பாலஸ்தீனத்தை ஆட்சி செய்தது. 2006 ஆம் ஆண்டு தேர்தலில் ஹமாஸ் அமைப்பு ஜெயித்து ஆட்சியைப் பிடிக்கும் சூழல் ஏற்பட்டது. ஆனால், அந்த அமைப்பு காஸா முனையில் மட்டும் அதிகாரத்தைச் செலுத்துவது போல ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டது.



யாசர் அராபத் உருவாக்கிய பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் அரசியல் அமைப்பான ஃபதா கட்சியும் 'இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரண்டு நாடுகள் இணைந்திருக்க வேண்டும்' என்ற கொள்கையை ஏற்றவை. ஆனால், ஹமாஸ் இதற்கு நேர்மாறாக இஸ்ரேல் என்ற நாடு இருப்பதையே ஏற்கவில்லை. யூதக் குடியிருப்புகளைக் கடுமையாக எதிர்த்தது. ஒரு கட்டத்தில் இஸ்ரேல் அரசுக்கும் ஹமாஸ் நிர்வாகத்துக்கும் நேரடி மோதல் வெடித்தது. இதன் தொடர்ச்சியாக காஸா முனையில் இருந்த யூதக் குடியிருப்புகளை அகற்றியது இஸ்ரேல். மேற்குக் கரையில் இருக்கும் பாலஸ்தீன அரசுக்கு எல்லா வகைகளிலும் உதவிய இஸ்ரேல், காஸாவைக் கைகழுவியது.

கடந்த 2007 முதல் காஸாவை ஆள்கிறது ஹமாஸ். அந்தப் பகுதி இப்போது இஸ்ரேலின் நிரந்தர முற்றுகையில் இருக்கிறது. காஸாவிலிருந்து வெளியேற மூன்று வழிகள் உள்ளன. இவற்றில் ரஃபா எல்லை என்பது எகிப்து நாட்டை ஒட்டியுள்ளது. இதுதவிர இஸ்ரேல் பக்கம் இரண்டு வழிகள் உள்ளன.

எல்லாமே நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன. காஸாவின் எட்டு அகதிகள் முகாம்களில் மட்டுமே ஆறு லட்சம் பாலஸ்தீனர்கள் வசிக்கின்றனர். ஐ.நா இவர்களுக்கான உதவிகளைச் செய்கிறது. தண்ணீர், மருந்து, உணவு என்று எல்லாவற்றுக்குமே தட்டுப்பாடு. வறுமையும் வேலையின்மையுமே நிரந்தர வாய்ப்புகள் எனும்போது எவரும் சட்டெனத் தடம் மாறுவது நடக்கிறது.

சின்னச் சின்னதாக ஹமாஸ் பல தாக்குதல்களை இஸ்ரேலில் நடத்தியிருந்தாலும் ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தியது கொடூரமான தாக்குதல். ஹிட்லரின் ஜேர்மனியில் நாஜிக்கள் நடத்திய தாக்குதலுக்குக் கொஞ்சமும் குறைவில்லாத கொடுஞ்செயல் அது. காஸா எல்லை தாண்டி ஆயுதங்க ளுடன் இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் தீவிரவாதிகள், யூதக் குடியிருப்புகளைச் சுற்றி வளைத்தனர்.

பல மணி நேரம் வீடுவீடாகத் தேடுதல் வேட்டை செய்து தாக்குதல் நடத்தினர். குழந்தைகளின் கண்ணெதிரே கொல்லப்பட்ட பெற்றோர்கள், இளைஞர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்துக்கொண்டு அவர்களின் பெற்றோரைக் கொன்றது.

இதைத் தொடர்ந்து இஸ்ரேல் போர் முழக்கம் செய்தது. 'காஸாவில் இருக்கும் பொது மக்கள் எல்லோரும் 24 மணி நேரத்துக்குள் தெற்குக் காஸாவை அடைய வேண்டும். வடக்குக் காஸாவில் இருக்கும் ஹமாஸ் தீவிரவாதிகளை அழிக்கப்போகிறோம்' என்றது.

ஆனால், அதற்கு முன்பாகவே காஸா முழுக்க பாஸ்பரஸ் குண்டுகள் உள் ளிட்ட பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தி அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது இஸ்ரேல்.

ஈவு இரக்கமின்றி அப்பாவிகளை ஹமாஸ் கொன்றதற்கு பதிலடித் தாக்குதலில் காஸாவில் இருக்கும் அப்பா விகள்தான் பலிகடா ஆகிறார்கள். போர் எப்போதும் எளிய மக்களின் ரத்தத்தையும் உயிரையுமே காவு வாங்கும் என்பதற்கு மீண்டும் ஒரு உதாரணம் ஆகியிருக்கிறது பாலஸ்தீனம்.

'காஸா வைத் தாக்கினாலும் அந்த நிலத்தை ஆக்கிர மிக்கக்கூடாது. தீவிரவாதிகளை அழித்துவிட்டு வந்துவிட வேண்டும்' என்று மென்மையாக இஸ் ரேலைத் தட்டிக்கொடுக்கிறது அமெரிக்கா.

ஹமாஸ் முக்கியத் தலைவர்கள் பலரும் கத்தார் நாட்டில் பாதுகாப்பாக இருக்கிறார்கள். இஸ்ரேல் உளவு அமைப்பான மொஸாத், அவர்களைக் கண்காணித்து வருகிறது.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தைத் தாண்டி எங்கெங்கோ ரத்தம் சிந்த இருக்கும் ஒரு முடிவில்லா யுத்தமாக இஸ்ரேல்-ஹமாஸ் யுத்தம் மாறக்கூடும்.

**ஜீனியர் விகடன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் ஓய்வு நிலை அதிபர் காசிப்பிள்ளை தவராசா அவர்கள் காலமாகிய செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் எழுச்சியிலும் வளர்ச்சியிலும் அதிபர் தவராசா அவர்களின் வகிபாகம் மிகவும் உன்னதமானது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருக்கிற முள்ளிவாய்க்கால் நினைவுவேந்தலுக்கு மீண்டும் கரைச்சல் வரும் போல...

**மூப்பர்:-** முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்குக் கரைச்சல் வருகுதோ அல்லது நிதி சார்ந்த ஓடிற் நடக்குதோ தெரியல்ல.

**சாத்திரியார்:-** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:-** ஒரு நிறுவனத்தில நிர்வாகம் நடத்துகிற போது, ஓரளவுக்குப் பக்க சார்பில்லாமல் நடக்க வேணும். அப்பதான் எதிர்க் குழுக்கள் உருவாகாமல் பார்த்துக் கொள்ள முடியும். அதோட ஒரு பெரிய நிறுவனத்தில ஒரு சிலரை மட்டும் தூக்கிப்பிடிக்கிறதும் நல்ல நிர்வாகமாக இருக்காது. பொதுவில உயர் பதவியில இருக்கும் போது, முப்பொழுதும் திருமேனி தொழுகின்றவர்கள் இருப்பினம்.

ஆனால் பதவி பறிபோய் விட்டுது எண்டால், அவ்வளவு தான். முப்பொழுதும் திருமேனி தொழுபவர்களைக் காணவே முடியாது.

இனி அவர்கள் புதிதாகப் பதவிக்கு வந்தவரைத் தொழுகை செய்யப் போயிருப்பினம். ஆகையால, நிர்வாகம் என்பது எதிர்ப்பினைச் சந்திக்காத வகையில் நடத்தப்பட வேணும்.

இந்தாப் பாருங்க, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அமைக்கப்பட்ட விடயத்தில எப்படியெல்லாம் நிதி பெறப்பட்டது. இதற்கு அனுமதி கொடுத்தவர்கள் யார்? எண்ட விடயங்கள் எல்லாம் விசாரணைக்கும் கணக்காய்வுக்கும் உட்படப் போவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கதைபடுகுது.

**கங்காணி:-** ஓ! எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில இதுகள் தானே ஆய்வுப்பொருள். அவர் என்ன செய்கிறார். இவர் என்ன செய்கிறார் இப்படியான ஆய்வுகள் தானே அங்க நடக்குது.

**வாத்தியார்:-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர முதலாவது துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் இறந்த போது, அவருடைய உடலை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில வைத்து அஞ்சலி செலுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டது. ஆனால் அதற்குப் பேராசிரியர் வித்தியானந்தனின் பிள்ளைகள் ஐயோ! கடவுளே! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கட அப்பாவுக்குச் செய்த துரோகம் போதும். நாங்கள் அப்பாவின்ர உடலை அங்க வைக்க விரும்பவில்லை எண்டு சொல்லிப் போட்டினம். இந்த வரலாறுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒருக்கால் மீளாய்வு செய்து பார்க்க வேணும்.

**பண்டிதர்:-** பல்கலைக் கழக விரிவுரையாளர் பதவி என்பது கடவுள் தந்த கொடை எண்டு நினைத்து அதற்குரிய பணியைச் செய்ய வேணும். இல்லை எண்டால் அவை கன்மவினையாகத் திரண்டெழும்.

இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூறியதும் ஆலடியில் மீண்டும் அமைதி நிலவியது அமைதியைக் குலைக்க, சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:-** இப்ப எங்கட யாழ்ப்பாணத்தில இளைஞர்களின்ர அட்டகாசம் எல்லை மீறி போவதாகப் பலரும் கூறுகினம்.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மைதான். இளைஞர்களின்ர அட்டகாசம் என்பதைவிட, உயர்தரம் படிக்கின்ற மாணவர்களின்ர அட்டகாசம்தான் சொல்லிமாளா.

**கங்காணி:-** தங்கட பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று படிக்கட்டும் எண்டு பெற்றோர் காசைக் கொடுத்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி விட, அதில ஒரு பகுதி மாணவர்கள் குழுவாகக் கூடி அட்டகாசம் செய்யினம். அதோட தனியார் கல்வி நிறுவனங்களில வகுப்புகள் நிறைவடைகிற போது, வீதிகளில ஏற்படுகின்ற நெருக்கடி சொல்லி மாளாது. இருந்தும் இது விடயத்தில இன்னமும் போக்குவரத்துப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கல்ல.

**சாத்திரியார்:-** சொன்னாப்போல, இப்ப யாழ்ப்பாண நகரப்பகுதியில பொலிஸாரின்ர கண்காணிப்பும் சோதனை நடவடிக்கைகளும் தீவிரமாக இருப்பதைப் பார்க்க முடியுது. புதிதாகப் பதவியேற்ற பொலிஸ் அதிகாரி பொறுப்போட நடக்கிறார் எண்டு நினைக்கிறன்.

**விதானையார்:** அது சரி, காங்கேசன்துறையில அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையின்ர நிலைமை இப்ப எப்படி இருக்குது.

**கங்காணியார்:** தென் பகுதியில, தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் நடத்துகிறவர்கள்தான் அதனை 50 வருட குத்தகைக்கு எடுத்திருப்பதாக அறிய முடியுது.

**மூப்பர்:** அப்ப காங்கேசன்துறையில இருக்கிற ஜனாதிபதி மாளிகை தென் பகுதிக்கோ போகப்போகுது.

**கங்காணியார்:** நான் அறிந்த வரையில காங்கேசன்துறையில இருக்கிற ஜனாதிபதி மாளிகையை ஐம்பது வருட குத்தகைக்கு வெளிநாட்டுல வசிக்கிற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எடுத்தவர் எண்டு அறிஞ்சனான்.

தென்பகுதியில இருக்கிற தகவல் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில இயக்குகிற வேலைகளை அவர் ஆரம்பித்திருக்கிறதாகவும் கேள்வி.

**வாத்தியார்:-** என்ன இருந்தாலும் எங்கட தமிழ்ப் பிள்ளைகள் கொழும்புக்குச் சென்று அங்க தனியார் பல்கலைக்கழகத்தில படிக்கிறதால ஏகப்பட்ட பணத்தைச் செலவிட வேண்டி இருக்குது.

அந்தப் பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில காங்கேசன் துறையில இயங்குவதன் மூலம் எங்கட பிள்ளைகள் இங்க இருந்து கொண்டே படிக்கிற வாய்ப்புக் கிடைக்கும்.

ஆனாலும் எங்கட கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின்ர மனக்கவலையை உரிய நிறுவனம் கவனத்தில எடுக்க வேணும். ஏனெண்டால் அது எங்கட சைவத் தமிழ்ப் பண்பாட்டோடும் வழிபாட்டோடும் சார்ந்தது.

**சிறாப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** எங்கட ஈழத்திரு நாட்டில வாழ்ந்த சித்தர்களின்ர ஜீவசமாதிகள் காங்கேசன்துறையில ஜனாதிபதி மாளிகை அமைந்த வளாகத்தில இருந்தது. அந்த ஜீவசமாதிகளை உடைச்சுப் போட்டுத்தான் ஜனாதிபதி மாளிகை கட்டினவியள் என்பது கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்களின்ர கருத்து.

எனவே அவர் முன்வைத்த கருத்துத் தொடர்பில் ஜனாதிபதி மாளிகையைக் குத்தகைக்குப் பெற்றவர்கள் கவனத்தில எடுக்க வேணும் எண்டு இந்த இடத்தில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## வடக்கு ஜனாதிபதி மாளிகையை குத்தகைக்கு எடுத்தவர்கள் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❝ வர்ண பகவானின் கருணை மலர்கள் கார்த்திகை தேசத்தில் மழைத் தூரல்களாக ஆரம்பம், வியாசரே உங்கள் உள்ளத்தில் இருந்து நான்கு வரிகள் கூறுங்கள்?

திகான்- வடமராட்சி

❝ மழைக் காலங்களில் வீட்டு வளவுகளில் தேங்கும் நீரை நிலத்தினுள் உறிஞ்ச விட்டால் நீர்வளம் அதிகரிக்குமல்லவா?

சி.சுரேசன்-பத்தமேனி

### மகாலட்சுமி- கொக்குவில்

**ஒருவன் மனது ஒன்பதடா அதில் ஒளிந்து கிடப்பது எண்பதடா என்ற பாடல் வரிகள் பற்றி?**

உறவுகளைப் பற்றி நாம் அறிய வேண்டும் என்றால் நாம் பணக் கஷ்டத்தில் இருக்கும் போது அறிந்து கொள்ளலாம்.
ஆம்,எம்மிடம் பணம் இருக்கும் போது உறவுகள் பலாப்பழத்தில் ஈ மொய்ப்பது போல ஒட்டியிருப்பார்கள்.
எம்மிடம் பணம் இல்லை என்பது தெரிந்துவிட்டால் செத்த நாயில் உண்ணி கழல்வது போல கழன்று சென்று விடுவார்கள்.
இது தான் ஜதார்த்த உலகம். இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அதற்கு எம்மைத் தயார்படுத்துவதற்குள் மனித வாழ்க்கை முடிந்து விடுவதே துரதிஷ்டம்.

### திகான்- வடமராட்சி

**வர்ண பகவானின் கருணை மலர்கள் கார்த்திகை தேசத்தில் மழைத் தூரல்களாக ஆரம்பம். வியாசரே உங்கள் உள்ளத்தில் இருந்து நான்கு வரிகள் கூறு ங்கள்?**

கார்த்திகை மாதம் கருணை மழை பொழிந்திட, கார்த்திகை பூக்கள் பூத்துக் குலுங்கி வாசம் வீசிட, மாண்ட எம் மறவர் குலத்தின் மான்பு மிகு முகங்களெல்லாம் அந்த மகரந்த மணிகளில் தெளிவாய்த் தெரிந்திட, இதயத்தில் தீபம் ஏற்றி எம் உயிரிலும் மேலான வீர மறவர்க்கு வணக்கம் செலுத்துவோம்.வாசல் எங்கும் தீபம் ஏற்றி வணங்கி அகமிருத்தி உரம் கொள்வோம்.
எம் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வோம் வீர மறவர் காவியத்தை...

### சி.சுரேசன்-பத்தமேனி

**மழைக் காலங்களில் வீட்டு வளவுகளில் தேங்கும் நீரை நிலத்தினுள் உறிஞ்ச விட்டால் நீர்வளம் அதிகரிக்குமல்லவா?**

உண்மை தான். ஆனால் அதற்கு மாநகர,நகர,பிரதேச சபைகள் ஒத்துழைக்க வேண்டுமே.
வீடுகளுக்கு விசிற் செய்து சோடாப் போத்தல் மூடிக்குள்ள தண்ணீர் தேங்கி நின்றாலே அதற்கு பைன் போட்டு விடுவினமே.
ஆனால் வீதியோர சாக்கடைக்குள்ள டெங்கு நோய் குதம் இருக்கிறது.
அதை சுத்தம் செய்வதும் இல்லை.கவனிப்பதும் இல்லை.
இது தான் இன்றைய அதிகாரிகளின் கடமை,கண்ணியம், கட்டுப்பாடு.
ஏசி அறை ஒரு நாளும் மக்களுக்கான பிரச்சினையைத் தீர்க்கவல்ல இடமல்ல. இதுவே உண்மை.

### கணேஸ்- பருத்தித்துறை

**பாலஸ்தீனத்திற்கு ஆதரவுக்கரம் நீட்டும் ஒரு நாடு கூட தமிழினம் அழியும் போது உதவிக்கரம் நீட்ட வில்லையே?**

தமிழினம் பாவப்பட்ட இனம். அந்த இனம் இலட்சக்கணக்கில் திட்டமிட்டு அழிக்கப்பட்டது.
அவ்வாறு அழிக்கப்படும் போது ஆதாரங்கள் வெளியே தெரிய வர, அழிக்கப்படும் அனைவரும் பயங்கரவாதிகள் என அரசு முத்திரை குத்தியது.
அந்த முத்திரையை நம்பி வெளிநாடுகள் நித்திரை கொண்டது.
பாலஸ்தீனத்திற்கு உதவிக் கரம் நீட்டுபவர்கள் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவிக்க மாட்டார்கள்.
ஏனென்றால் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா நிற்கிறதே.

### மதுவன்- மீசாலை

**முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாறு பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாறு, 800 என்ற பெயரில் திரைப்படமாக கடந்த வாரம் வெளியாகி இருந்தது.
இதில் முரளிதரனின் வாழ்க்கைச் சரித்திரம் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.
ஒரு கட்டத்தில் முரளிதரன் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து உயிர்களை அழித்து ஏன் யுத்தம் செய்கிறீர்கள் எனக் கேட்கிறார்.
இங்கு முரளியிடம் கேட்கப்படும் கேள்வி எதுவெனின் அப்படிப்பட்ட ஒரு கேள்வியை ஏன் நீங்கள் அரசாங்கத்திடம் கேட்கவில்லை என்பது தான்.

### விஜயதரன்- உரும்பிராய்

**தென்னிந்திய பிரபல இசையமைப்பாளர்கள், பாட கர்கள் வரிசையாக யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்தத் தொடங்கிவிட்டார்களே?**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் (பலாலி) செயற்படத் தொடங்கிய பிறகு பல பிரபலங்கள் யாழ்ப்பாணத்துக்கு சத்தமில்லாமல் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.
யாழ்ப்பாணம்- தமிழக உறவு இன்று நேற்று வந்த உறவல்ல அது நீண்ட நெடுங்கால தொப்புள்கொடி உறவு.
அதை வளர்ப்பது நிச்சயம் எமக்கு பலத்தையே தரும்.
இந்த நெருக்கத்தை விரும்பாத பேரினவாதம் பலாலி விமான நிலை யத்தை மூடத் திட்டம் தீட்டிக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா?



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல் - 2024

# கரைச்சி பிரதேச சபை கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2024.01.01 - 2023.12.31 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி** :- 2023.10.23 - 2023.11.06 வரை (அலுவகை நாட்களில் மு.ப 09.00 - பி.ப 01.00)

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி** :-2023.11.07 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

**கேள்விதிறக்கும் திகதி** :-2023.11.07 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

**கேள்விதிறக்கும் இடம்** :- கரைச்சி பிரதேசசபை தலைமை அலுவலகம்.

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை எம்மால் வழங்கப்பட்ட கடித உறையில் செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என முகவரியிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிட்டு 2023.11.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்வி பெட்டியினுள் மேற்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.

இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என முகவரியிட்டு குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விகள் யாவும் 2023.11.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையில் கேள்விச் சபை முன்னிலையில் திறக்கப்படும். கேள்விச் சபையின் முடிவே இறுதி முடிவாகும். கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விகாரர் பிரசன்னமாகி இருக்கலாம்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்பு பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்வி படிவ கட்டணம் மீளளிக்க முடியாதது | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| | சேவைச்சந்தை -கிளிநொச்சி | | | |
| 1 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மீன், கருவாடு, முட்டை | 50,000.00 | 1,000.00 | 3,247,200.00 |
| 2 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை மரக்கறி | 100,000.00 | 1,000.00 | 6,556,122.10 |
| 3 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை பழம், வெற்றிலை, பாக்கு | 25,000.00 | 1,000.00 | 2,455,200.00 |
| 4 | கிளிநொச்சி சந்தை தராசு கொட்டகை தேங்காய் | 25,000.00 | 1,000.00 | 5,501,100.00 |
| 5 | கிளிநொச்சி சந்தை துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 60,000.00 | 1,000.00 | 4,284,500.00 |
| 6 | கிளிநொச்சி சந்தை இல.1 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,757,500.00 |
| 7 | கிளிநொச்சி சந்தை இல.2 கோழி இறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 4,037,220.00 |
| 8 | கிளிநொச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 50,000.00 | 1,000.00 | 3,681,700.00 |
| 9 | கிளிநொச்சி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | 863,500.00 |
| 10 | கிளிநொச்சி சேவைச்சந்தை பொதுமலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 42,900.00 |
| | கிளிநகர்ப் பகுதி | | | |
| 1 | கிளிநொச்சி சிறுவர் பூங்கா அருகில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையம் | 10,000.00 | 1,000.00 | 907,500.00 |
| 2 | பரந்தன் சந்தியில் இருந்து இரணைமடுச் சந்தி வரையான A9 வீதி வாகன தரிப்பிடம் | 2,000.00 | 1,000.00 | 83,327.62 |
| 3 | மருதநகர் இயற்கை பூங்கா | 1,000.00 | 1,000.00 | 23,895.00 |
| 4 | பசுமைபூங்கா அழகுக்கலையகம் | 2,000.00 | 1,000.00 | 19,537.20 |
| | பொதுச்சந்தை – பரந்தன் | | | |
| 1 | பரந்தன் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | 48,950.00 |
| 2 | பரந்தன் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 15,000.00 | 1,000.00 | 1,222,112.10 |
| 3 | பரந்தன் சந்தை கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 402,820.00 |
| 4 | பரந்தன் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 115,500.00 |
| 5 | பொது மலசலகூடம் | 1,000.00 | 1,000.00 | 24,000.00 |
| | பொதுச்சந்தை- வட்டக்கச்சி | | | |
| 1 | வட்டக்கச்சி சந்தைதொகுதி | 3,000.00 | 1,000.00 | |
| 2 | வட்டக்கச்சி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | |
| 3 | வட்டக்கச்சி கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | |
| 4 | இராமநாதபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | |
| 5 | இராமநாதபுரம் கோழியிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | |
| 6 | இராமநாதபுரம் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- இரணைமடு | | | |
| 1 | இரணைமடு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | |
| 2 | இரணைமடு சந்தை மாட்டிறைச்சிக்கடை | 20,000.00 | 1,000.00 | |
| 3 | இரணைமடுசந்தை கோழி இறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | |
| | கனகாம்பிகைக்குளம் | | | |
| 1 | கனகாம்பிகைக்குளம் சிறுவர் பூங்கா | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- உருத்திரபுரம் | | | |
| 1 | D10உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | |
| 2 | D10உருத்திரபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | |
| 3 | D10உருத்திரபுரம் கோழியிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| 4 | D8 உருத்திரபுரம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- ஸ்கந்தபுரம் | | | |
| 1 | ஸ்கந்தபுரம் சந்தை தொகுதி | 5,000.00 | 1,000.00 | |
| 2 | ஸ்கந்தபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | |
| 3 | ஸ்கந்தபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- தருமபுரம் | | | |
| 1 | தருமபுரம் சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | |
| 2 | தருமபுரம் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | |
| 3 | தருமபுரம் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- கல்லாறு | | | |
| 1 | கல்லாறு மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | |
| 2 | கல்லாறு சந்தை தொகுதி | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- ஜெயந்திநகர் | | | |
| 1 | ஜெயந்திநகர் மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 | |
| 2 | ஜெயந்திநகர் கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- ஊற்றுப்புலம் | | | |
| 1 | ஊற்றுப்புலம் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- ஆனைவிழுந்தான் | | | |
| 1 | ஆனைவிழுந்தான் மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| | வன்னேரிக்குளம் | | | |
| 1 | வன்னேரிக்குளம் சுற்றுலா மையம் | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- கண்டாவளை | | | |
| 1 | கண்டாவளை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- முரசுமோட்டை | | | |
| 1 | முரசுமோட்டை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | |
| 2 | முரசுமோட்டை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- அக்கராயன் | | | |
| 1 | அக்கராயன் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | |
| | பொதுச்சந்தை- புன்னைநீராவி | | | |
| 1 | புன்னைநீராவி மாட்டிறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |
| 2 | புன்னைநீராவி கோழி இறைச்சிக்கடை | 3,000.00 | 1,000.00 | |

## நிபந்தனைகள்

1. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் எதுவித அறிவித்தலுமின்றி இர
2. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்தத் தவறிய பட்டியலில் உள்ளவர்களும் குத்தகை கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவர்
3. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, கேள்விசபைக்கு அதிகாரமுண்டு.
4. கேள்விகாரர் இலங்கை பிரஜையாகவும் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வே
5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும்போது தம் ஆளடையாளத்தை ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியை (தேசிய அடையாள அட் அனுமதிப்பத்திரம்) கிராம சேவையாளர் மூலம் உண்மைப் பிரதி என சமர்ப்பிப்பதுடன், கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1,000.00 | 198,000.00 |
| 1,000.00 | 782,056.00 |
| 1,000.00 | 715,605.00 |
| 1,000.00 | 353,980.00 |
| 1,000.00 | 136,180.12 |
| 1,000.00 | 55,000.00 |
| 1,000.00 | 138,600.00 |
| 1,000.00 | 1,446,500.00 |
| 1,000.00 | 605,000.00 |
| 1,000.00 | 3,207.60 |
| 1,000.00 | 294,800.00 |
| 1,000.00 | 7,606.39 |
| 1,000.00 | 231,000.00 |
| 1,000.00 | 215,055.00 |
| 1,000.00 | 197,954.85 |
| 1,000.00 | 620,400.00 |
| 1,000.00 | 209,275.00 |
| 1,000.00 | 79,200.00 |
| 1,000.00 | 636,900.00 |
| 1,000.00 | 170,720.00 |
| 1,000.00 | 37,881.03 |
| 1,000.00 | 12,000.00 |
| 1,000.00 | 592,350.00 |
| 1,000.00 | 297,000.00 |
| லம் | |
| 1,000.00 | 234,300.00 |
| ன் | |
| 1,000.00 | 137,280.00 |
| 1,000.00 | 38,961.00 |
| 1,000.00 | 36,300.00 |
| 1,000.00 | 162,800.00 |
| 1,000.00 | 33,223.77 |
| 1,000.00 | 47,930.30 |
| 1,000.00 | 145,800.00 |
| 1,000.00 | 116,800.38 |

...றிவித்தலுமின்றி இரத்துச் செய்யப்படும்.

...செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் ...ற்றத் தகுதியற்றவர்கள்.

...வா ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ

...மேற்பட்டவராகவும் கரைச்சிப் பிரதேச ...வும் இருத்தல் வேண்டும்.

...ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ...ய அடையாள அட்டை அல்லது சாரதி ...ண்மைப் பிரதி என சான்றுப்படுத்தி ...ட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும்

06. கேள்வி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது சபையால் வழங்கப்பட்ட கேள்விப்பத்திரம், கடித உறை என்பவற்றை மட்டுமே பயன்படுத்த முடியும்.

07. சித்தியடையும் கேள்விகாரர் கேள்வி தொகையின் மூன்றில் ஒரு பகுதித் தொகையினை குறித்த காலத்திற்குள் (ஆகக்கூடியது ஒருவார காலத்தினுள்) செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

08. இறைச்சிக் கடைகள், சந்தைகள், குத்தகை நிலையங்கள் அனைத்தும் குத்தகைக்கு எடுப்பவராலேயே நாடாத்தப்பட வேண்டும். குத்தகைகாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

09. மாதாந்த குத்தகைக் கட்டணங்களை அம்மாத இறுதிக்குள் செலுத்துதல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் செலுத்தத்தவறின் பத்து நாட்களுக்கு உட்பட்டு செலுத்தும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 10% தண்டப்பணத்தையும், காலதாமதம் பத்து நாட்களுக்கு மேற்படும் பட்சத்தில் கட்டுப்பணத்துடன் 15% தண்டப்பணத்தையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

10. தொடர்ச்சியாக இரு மாதங்கள் குத்தகைகட்டணங்கள் செலுத்தத் தவறும் பட்சத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி குத்தகை நிலையம் சபையால் பொறுப்பேற்கப்படும்.

11. கொல்களத்தில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை, இறைச்சிக் கடையினை குத்தகைக்கு எடுத்தவர் தன்னால் குத்தகைக்கு பெற்றுக்கொண்ட குத்தகை நிலையத்துக்கு மட்டும் எடுத்துச்செல்ல முடியும். பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணத்திற்காகவும் கொண்டு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

12. துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையத்திற்கான கட்டணமாக துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 10.00 உம், மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 20.00 உம், முச்சக்கரவண்டி, கயஸ் போன்ற சிறியரக வாகனங்களுக்கு ரூபா 30.00 உம், கனரக வாகனங்களுக்கு ரூபா 50.00 உம் மட்டுமே அறவிடமுடியும்.

13. அனைத்து தராசுக்கொட்டகைக்குமான வரி அறவீட்டினை மேற்கொள்ளும் போது 4% தூக்கு வரியாக அறவிட முடியும். வரி வீதங்களின் அதிகரிப்பையோ குறைப்பையோ சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.

14. கிளிநகர்ப்பகுதி வாகன தரிப்பிட கட்டண அறவீடு, ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் அனைத்தும் "2016.02.02 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் (அதிவிஷேசமானது) பகுதி 2- பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்துதலை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்" தொடர்பான 1 தொடக்கம் 36 வரையான நியமத்துணை விதிகளுக்கு கட்டுப்படும்.

15. ஆரம்பகேள்வித் தொகையைவிட குறைவான கேள்வி கோருபவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

16. சபையால் கட்டப்பட்ட கடைகள் காணப்படாதவிடத்து சபையால் கடை கட்டப்படும் வரை தற்காலிக கடை குத்தகைதாரராலேயே கட்டப்பட வேண்டும். இதற்கான செலவீனங்களை சபை பொறுப்பேற்காது என்பதுடன் சபையால் கடை கட்டி வழங்கப்படவில்லை என்ற காரணத்தை முன்வைத்து மாதாந்த கட்டணத்தில் விலக்களிப்போ, குறைப்பனவோ வழங்கப்படமாட்டாது.

17. இறைச்சிக்கடைக்குரிய மாதாந்த இடவாடகை கட்டணமாக ரூபா 1500.00 இனை ஒவ்வொரு மாதமும் சபைக்கு செலுத்த வேண்டும்.

18. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக பிரதேச சபை தவிசாளர்/செயலாளரினால் காலத்துக்குகாலம் விதிக்கப்படும் எழுத்து மூல நிபந்தனைகளையும் குத்தகைகாரர் கடைப்பிடிக்க வேண்டும்.

19. மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வெளியிடப்படும் வர்த்தமானிகள், சுற்றுநிருபங்களுக்கு அமைய சபையினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

20. இந்நிபந்தனைகள் தொடர்பாக சபையின் எந்தவித முடிவையும் ஏற்பதுடன் இது தொடர்பில் சபைக்கெதிராகவோ தவிசாளர்/செயலாளருக்கெதிராகவோ நீதிமன்ற நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள முடியாது.

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(7461)

# மக்கள் மயப்படுத்தப்படாத போராட்டங்கள்!

போராட்டங்கள் என்பது மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இருந்தால் மாத்திரமே அந்தப் போராட்டங்கள் வெற்றி பெறும் என்பது நிறுதிட்டமான உண்மை.

மக்கள் மயப்படுத்தப்பட்ட, உணர்வு ரீதியான போராட்டங்கள் இற்றைக்கு 14 ஆண்டுகளுக்கு முன்னைய காலங்களில் நடந்தன என்பதை இவ்விடத்தில் பதிவிடுவது காலத்தின் தேவை.

தவிர அதன் பின்னர் மக்கள் மயப்படுத்தப்பட்ட உணர்வு ரீதியான ஒரு மக்கள் போராட்டம் என்றால் 2017 ஜூன் மாதம் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து மக்கள் வீதிக்கு வந்து குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக மேற் கொண்டிருந்த பாரிய மக்கள் எழுச்சிப் போராட் டத்தைக் குறிப்பிட்டு கூறமுடியும்.

இதற்கு ஒருபடி மேலாக மாணவி வித்தியா படுகொலைக்கு நீதி கோரிய மக்கள் போராட்டத்தையும் கோடிட்டுக் காட்ட முடியும்.

ஆயினும் அதன் பின்னரான மக்கள் மயப்படுத்தப்பட்ட உணர்வு ரீதியான போராட்டங்கள் எவையும் தமிழர் தாயகத்தில் நடைபெறவில்லை என்பதே உண்மை.

அவ்வாறு நடந்திருந்தாலும் அப்போராட்டங்கள் குறிப்பிட்ட வெற்றியை பெறத்தவறின, பிசுபிசுத்துப் போயின.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சரவணராஜா அவர்களின் பதவி துறப்பிற்கு நீதி கோரிய கடையடைப்புப் போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வடக்கில் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்திற்கு எட்டுத் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விட்டிருந்ததுடன் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஆயினும் அந்தப் போராட்டம் நினைத்த அளவிற்கு வெற்றி பெறவில்லை என்பது கசப்பான உண்மை.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார சிக்கல் மக்களின் குரல்வளையை நசுக்கும் இவ் வேளையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்கள் வெற்றி பெறுவது என்பது குதிரைக்கொம்பே. மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் போது அதில் உள்ள சாதக, பாதக விடயங்களை கவனத்தில் எடுக்க வேண்டியது ஒழுங்கமைப்பாளர்களின் கடமை.


இப்போது பண்டிகைக்காலம், அத்துடன் நவராத்திரி விரத காலம், பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைக்காலம், திருமணங்கள் நடத்தப்படக்கூடிய திருமண நாள் காலம் இவ்வாறு பல தவிர்க்க முடியாத செயற்றிட்டங்கள் ஒன்றிணைந்த காலத்தில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் அப்போராட்டங்கள் வெற்றி அடையுமா என்பதை போராட்ட ஒழுங்குபடுத்துநர்கள் சிந்தித்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

ஒக்டோபர் 20 வடக்கில் பூரண கடையடைப்பு என அழைப்பு விடுத்த அடுத்த கணமே மாணவர்களுக்கான பரீட்சைகள் நடைபெறுமா இல்லையா என்பது தொடர்பில் கல்விப்புல அரச நிர்வாகத்தினால் அறிவித்தல் விடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அவ்வாறான அறிவித்தல் எவையும் வெளிவரவில்லை. அதனால் பரீட்சைகள் நடக்குமா இல்லையா என மாணவர்கள், பெற்றோர்கள் பெரும் குழப்பத்தில் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கடையடைப்ப போராட்டத்தை ஒழுங்கு படுத்தியவர்களும் சரி அதை எதிர்கொண்ட மக்களும் சரி பெரிய குழப்பத்தின் மத்தியிலேயே குறித்த நளைக் கடந்தனர் என்பதே முடிவாககிறது.

**அபிமன்யு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா... என் செல்லம்மா

என் அம்மா ... என் செல்லம்மா... என் உயிர் அம்மா
'அம்மா' என்பது மூன்றெழுத்து வார்த்தை
எப்பவுமே என்னுடைய பிரியம் அம்மா தான்
அம்மா என்றாலே என் உயிரின் மேலான உயிர்
அம்மா ... செல்லம்மா ... தங்கம்மா... பொன்னம்மா
என் அம்மா என் உயிருக்கு உயிர் கொடுத்த அம்மா
என் அம்மா எனக்கு ஒரு அழகிய இனிய கவிதை
என் அம்மா தான் எனக்கு முழு உலகம்
'அம்மா'... அதுக்கு மேல் அழைக்க வார்த்தைகள் இல்லை
என் அம்மா கடவுளின் மறு அவதாரம்
என் கண்கண்ட தெய்வம் என் அம்மா தான்
நான் மண்ணைத் தொட மரணத்தைத் தொட்டவள்
என் உயிரில் இருப்பவள் என் அம்மாவே
கருவில் இருக்கும் போதும் அன்பு காட்டிய தெய்வம்
அம்மாவின் அன்புக்கு நிகர் உலகில் வேறு எதுவும் இல்லை
அம்மாவே என் உலகம்... அம்மா என் தேவதை
என் அம்மா எங்கள் குலசாமி .
தெய்வம் எனக்குத் தந்த மிகப்பெரிய கொடை
பூமி தாங்கும் முன்னே என்னை பூவாய் தாங்கியவள்
என்னை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய தெய்வம்
என் அம்மா!



ஈ.பங்கயற்செல்வி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

## ஆசை

அளவாக ஓடினால்
ஆறு ..
அளவற்று ஓடினால்
வெள்ளம்!
மிதமாய் வீசினால்
மென்காற்று
மிகையாக வீசினால்
சூறாவளி
நியாய ஆசைகளை
நெஞ்சில் நிறுத்துவோம்
நெறி பிறழா ஆசை
நெருப்பில் சோறு சமைப்போம்
வீட்டுக் கூரை
எரியாது..
எச்சரிக்கையுடன்

தமிழினியன்,
வவுனியா.



## மனிதன் மாற வேண்டும்

இயற்கையின் அருமை புரியாத மனிதன்
இரந்து நிற்கிறான் வானத்தை நோக்கி
பிளாஸ்ரிக், பொலித்தீன் வேண்டாம் என்றோமே
அதுதான் மலிவாக கிடைக்கு தென்றான்
காடுகளை அழிக்க வேண்டாம் என்றோமே
அபிவிருத்தி அடைய முடியாதென்றான்
மரத்தை நாட்டி பயன்பெறுங்கள் என்றோமே
அதனால் எமக்கு பயன் கிடைக்காதென்றான்
நீரைச் சேமித்து வையுங்கள் என்றோமே
அதற்கு பணம்தான் கிடக்குதென்றான்
இயற்கையைப் பாதுகாத்து வாழுங்கள் என்றோமே
செயற்கையெங்கும் வியாபித்ததென்றான்
உணவு உண்ண அரிசி வேண்டும்
அதனை செய்ய உழவன் வேண்டும்
உழவு செய்ய மழை பெய்ய வேண்டும்
வேண்டும் வேண்டும் மழை பெய்ய வேண்டும்
அதற்கு மனிதன் மாற வேண்டும்

ப.தர்மகுமாரன்,
அராலியூர்.



## மௌனத்தின் தேடல்-691



## தொலைவதெப்போ

நெஞ்சை அதிரச் செய்யும்
யுத்த முழக்கங்கள்
உயிர்கள் கொய்யப்பட்ட
பிணச் சிதறல்கள்
மத்தியில் அவலைகளான
சிறுவனும் சிசுவும் போல
எண்ணற்றோரின் பீதியுடன்
திகைத்துவெறித்திருக்கும்
நிலைமைஉலகிலிருந்து
தொலையாதோ

சி.இ. அன்புதுரை,
மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 692



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## பரிதவிப்பு

மனிதாபிமானமில்லா உலகத்திலேயே
மரண ஓலங்களின் மத்தியிலே
பெற்றோரை தவறவிட்ட நிலையில்
சின்னஞ்சிறார்களாகிய நாம்
சிரித்துப் பேசி விளையாடும் பருவத்தில்
சிதறி விழுந்திடும் கட்டிடங்கள் மத்தியில்
உயிரைக் காப்பாற்ற உடன்பிறப்புடன்
ஏக்கத் தவிப்புன் ஏகாந்தமாய் நானும்
பரிதவித்து நிற்கிறேன்

ஆ.செல்வி, திருநாவலூர்.

## பாசப்பிணைப்பு

எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
சகோதர பாசம் விட்டுப்போகுமா?
யாராலும் பிரிக்க முடியாத பந்தம்
தான் இந்தப் பாசப்பிணைப்பு

க. திருமகள்,
பண்டத்தரிப்பு.

## மயான பூமி

கொடிய யுத்தத்தால் தாய் தந்தையை இழந்த இப
பிஞ்சுகள் இரண்டும் பறக்கத் தெரியாப் பறவைக்
குஞ்சுகள் போல் பயந்து ஒடுங்கிய படி சுடு
காடாகிப் போன மயான பூமியின் மத்தியில்
திக்குத் திசை தெரியாத நிலையில் அநாதரவாக

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

## வதையும் இறையும்

கொடுமையிலும் கொடுமையானது
இளமையில் தனிமை தான்
பொத்திப் பாதுகாக்க வேண்டியவர்கள்
போருக்கு மத்தியில் பீதியுடன்
தூரத்து இடிமுழக்கமென்று
துயரத்தை மறந்து இருந்தவர்கள்
தொலைக்காட்சியில் வந்த போது
திகைத்துப் போய் நிற்கின்றார்
வதை வகை தொகையாகின்ற போது
இறைமீது நம்பிக்கை அதிகரிக்கின்றது

ச. வரதலிங்கம்,

## பாலையும் பாலரும்

இன, மொழி போன்று
அன்பைப் போதித்து வளர்க்கும்
மதமும் கூட போராட்டத்தில்
விதம்விதமாய் தலை காட்டும்
உக்கிரமான மோதல்களால்
உக்ரைன் உருக்குலைந்தது
பாலஸ்தீனமும் பாலையானது
பாலகர்களும் பரிதவிப்பில்
யாதும் ஊரேயென்றும்
யாவரும் கேட்க கேளீர் என்றும்
சங்கப் புலவர் பூங்குன்றனாரின் கூற்று
சங்கடங்களை போக்க வல்லது

க.நாகராசா, நுணாவில்.

## போரின் பாதிப்பு
### பரிதவிக்கும் பச்சிளங் குழந்தைகள்

போரின் கொடூரங்களால்
பெற்றோரை இழந்திட்ட
பாதிப்புற்ற இப் பச்சிளங் குழந்தைகளின்
பதபதைக்கும் இப் பரிதாபத்தினை
பாதுகாத்திட யாருளரோ?

தாங்கத்தமிழன் ,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

பாடம்: சவாலே சமாளி

இசை: M.S.விஸ்வநாதன்

பாடியவர்: P.சுசீலா

வரிகள்: கண்ணதாசன்



புழுத்தை கடிக்கும் அணிலே
இன்று பசிக்கின்றதோ? புழம் ருசிக்கின்றதோ?
பாட்டு படிக்கும் குயிலே
நீ படித்ததுண்டோ? சொல்லி
கொடுத்ததுண்டோ?

---

சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு?
தென்றலே உனக்கேது சொந்த வீடு?
சிட்டுக்குருவிக்கென்ன..
உலகம் முழுதும் பறந்து பறந்து
ஊர்வலம் வந்து விளையாடு
உலகம் முழுதும் ...

சிட்டுக்குருவிக்கென்ன கட்டுப்பாடு?
கட்டுப்பாடு.. ஒஹோ..

மரத்தில் படரும் கொடியே
உன்னை வளர்த்தவரா இங்கு படர விட்டார்?
மரத்தில் படரும்...
மண்ணில் நடக்கும் நதியே
உன்னை படைத்தவரா இந்த பாதை சொன்னார்?
உங்கள் வழியே உங்கள் உலகு
இந்த வழிதான் எந்தன் கனவு
சிட்டுக்குருவிக்கென்ன..

புழுத்தை கடிக்கும் அணிலே
இன்று பசிக்கின்றதோ? புழம் ருசிக்கின்றதோ?
பாட்டு படிக்கும் குயிலே
நீ படித்ததுண்டோ? சொல்லி கொடுத்ததுண்டோ?
நினைத்ததெல்லாம் கிடைக்கவேண்டும்
நினைத்த படியே நடக்கவேண்டும்
சிட்டுக்குருவிக்கென்ன..

வளரும் தென்னை மரமே
நீ வளர்ந்ததை போல் நான் நிமிர்ந்து நிற்பேன்
வணங்கி வளையும் நாணல்
நீ வளைவதை போல் தலை குனிவதில்லை
பார்க்கும் கண்கள் பணிய வேண்டும்
பாவை உலகு மதிக்க வேண்டும்.
சிட்டுக்குருவிக்கென்ன

# அசராத ஆளுமையும் உலகக்கோப்பையும்!

நடப்பு உலகக்கோப்பையில் இலங்கை அணியின் நிலை பரிதாபமாக இருக்கிறது. ஆடும் போட்டிகளிலெல்லாம் அடி மேல் அடி வாங்கிக் கொண்டிருக்கிறது. பேட்டர்கள் கஷ்டப்பட்டு அடித்துக்கொடுக்கும் ரன்களை, சிரமமே இல்லாமல் எதிரணி களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றனர் இலங்கை பௌலர்கள். முன்னாள் சம்பியன் என்கிற கௌரவத்தையே மறக்கடிக்கும் வகையில் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அணியிடம் மொத்தமாகவே ஒரு சோர்வும் அயர்ச்சியும்தான் வெளிப் பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களை ஊக்கப்படுத்திக்கொள்ள வெளியே இருந் தெல்லாம் யாரும் உசுப்பிவிட தேவை யில்லை. அவர்களுக்குள்ளாக அவர்களின் வரலாற்றின் வழியாகவே தாங்களே உசுப்பிக்கொள்ள முடியும்.

எந்த ஓர் அணியுமே முதல்முறையாக கோப்பையை வெல்லும் நேரங்களில் பெரும் நம்பிக்கையளிக்கக்கூடிய, அது வரையிலான குணாதிசயங்களை அப்ப டியே மாற்றியமைக்கக்கூடிய ஆளுமை களையே கப்டன்களாக கொண்டிருக்கும். க்ளைவ் லாய்ட், கபில் தேவ், ஆலன் பார்டர், இம்ரான் கான், இயான் மோர்கன் என தங்கள் அணிக்கு முதல் முறையாக கோப் பையை வென்று கொடுத்த அத்தனை பேரும் இப்படியானவர்கள்தான். இந்த வரிசையில் இலங்கைக்கான இடத்தை நிரப்பியவர் அர்ஜுனா ரணதுங்கா. 1996 இல் இலங்கை அணி முதல் முறையாக உலகக்கோப்பையை வென்றது. சொல் லப்போனால் இலங்கை வென்றிருக் கும் ஒரே ஒரு உலகக்கோப்பையும் அது தான்.

சமீபத்தில் முத்தையா முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றுப் படம் "800" என்ற பெயரில் வெளியானது. பத்திரிகையாளர் சந்திப்பில் முரளிதரன் பேசும்போது, "அர் ஜுனா ரணதுங்கா அவர்கள் என்னுடைய தகப்பனைப் போன்றவர்" என்றார். அந்த ளவுக்கான நம்பிக்கையையும் பிணைப் பையும்தான் ரணதுங்கா தன்னுடைய வீரர்களுடன் ஏற்படுத்தி வைத்திருந்தார். எத்தகு சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டாலும் என்னவானாலும் தன்னுடைய சகாக்க ளுக்காக நிற்பதே நல்ல தலைவனுக்கான தகுதி. ரணதுங்கா அதனால்தான் சிறந்த தலைவராக அறியப்பட்டார்.

முத்தையா முரளிதரனின்பந்துவீசு முறை சர்ச்சையானபோது அவர் பலத்த விசார ணைகளையும் சோதனைகளையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அந்த சமயத் தில் ஒரு கப்டனாக முரளிதரனுக்கு ரண துங்கா முழுமையாக துணைநின்றார். முர ளிக்காக ஒட்டுமொத்த அணியையும் கூட்டிக் கொண்டு போட்டிக்கு நடுவிலேயே பாதியில் வெளியேறவும் செய்தி ருக்கிறார். முரளிதரன் எல்லா சோத னைகளிலும் வென்று மீண்டும் தன் நிலைக்கு முழுமையாக திரும்பியதற்கு ரணதுங்காவே பெரிய காரணமாக இருந்தார். முரளிதரன், ரணதுங்காவை "தகப்பன்" என இதனால்தான் அழைத்தார்.

மொத்த அணியையும் நெஞ்சை நிமிர்த்தி முன்நின்று வழிநடத்தும் தளபதியாக ரணதுங்கா இருந்தார். 1996 உலகக்கோப்பை, ஜெயசூர்யாவின் உலகக்கோப்பை. அவரின் அதிரடியில் மற்ற அணிக ளெல்லாம் மிரண்டு போயின. அவர், அடித்து வெளுத்ததற்கும் ரணதுங்காதான் காரணம். அவர் தான் ஜெயசூர்யாவை ஓப்பனராக்கினார். "போய் உன் மனம் சொல்கிறபடி ஆடு. தைரியமாக பட்டை பிடி. என்ன ஆனாலும் இந்த உலகக்கோப்பை முழுக்க அணியில் உனக்கு இடமுண்டு" என துணிச்சலூட்டி ஜெயசூர்யாவை மைதானத்துக்குள் அனுப்பி வைத்தார். அதன்பிறகு நடந்தவையெல்லாம் வரலாறு. அந்தத் தொடரில் ஜெயசூர்யாவின் ஸ்ட்ரைக் ரேட் 131. இப்போது கூட ஒரு தொடரின் முடிவில் சராசரியாக இந்தளவுக்கு ஸ்ட்ரைக் ரேட் வைத்திருக்கும் பட்டர்கள் ரொம்பவே குறைவு. "அதுவரையில் எங்களை அமைதியான பையன் களாக பார்த்த மற்ற அணிகள், அப்போதிருந்து ஆக்ரோஷமான அணியாகப் பார்க்க ஆரம்பித்தனர். காரணம், ரணதுங்கா" என்கிறார் இலங்கையின் முன்னாள் வீரர் ரஞ்சித் ஃபெர்னாண்டோ.

அணியை ஒரு குடும்பமாக பார்க்கும் பாணியை வீரர்களுக்குள் ரணதுங்கா புகுத்தினார். அவரே எல்லா வீரர்களையும் தம்பி என்றுதான் அழைப் பாராம். வீரர்களும் அவரை அண்ணன் என்றுதான் அழைப்பார்களாம். இந்த உறவு முறைகளெல்லாம் வெறும் வார்த்தைகளில் மட்டுமல்ல. நிஜத்திலுமே அவர் அந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுக்கும் வகையில்தான் செயற்பட்டார். அதனால்தான் உலகக்கோப்பை மட்டுமல்லாமல், சொந்த மண் ணிலேயே அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்ற அணிகளையும் வீழ்த்த முடிந்தது.

அர்ஜுனா ரணதுங்கா ஊட்டிவிட்டு சென்ற ஊக்கத்தின் பலனை ஏறக்குறைய அடுத்த 15 ஆண்டுகளுக்கு அறுவடை செய்தது இலங்கை அணி. கிட்டத்தட்ட 2015 வரைக்கும் எந்த ஐ.சி.சி தொடராக இருந்தாலும் பெரும்பாலும் இலங்கை அணி நாக் அவுட் வரை முன்னேறிவிடும். ரொம்பவே சீரான அணியாக இருந்தது. பெரிய அணிகளின் அந்தஸ்தில் தங்களையும் வைத்துக்கொண்டது. ஆனால், சில ஆண்டுகளாக அந்த வழக்கத்தை யெல்லாம் மறந்து, எல்லா தொடரிலும் அடி மேல் அடி வாங்கிக் கொண்டிருக்கிறது. நடப்பு உலகக்கோப்பை தொடருக்குக் கூட ஆப்கானிஸ்தான் அணி நேரடியாக தகுதி பெற்றுவிட்டது. ஆனால், இலங்கை அணி தகுதிச்சுற்றில் ஆடி வென்ற பிறகே தொடருக்குள் வந்திருக்கிறது. இலங்கை அணி மீண்டெழுவ தற்கான ஊக்கச் செய்தி, அவர்களின் வரலாற்றி லேயே இருக்கிறது. அதை உணர்ந்து சீக்கிரமே அந்த அணி மீண்டு வர வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

370

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உங்களுக்கு கால் வீக்கம் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்...

கணுக்கால் வீக்கம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? இந்த வீக்கம் இருப்பவர்களுக்கு என்ன நோய் நிலைமைகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது? எவ்வாறு அவர்களைப் பரிசோதித்து சிகிச்சை அளிப்பது? இதற்கான தீர்வுகள் என்ன? என்பவை பற்றிப் பார்ப்போம்.

உங்களுக்கு கணுக்கால் வீக்கம் இருக்கிறதா இல்லையா என அறிந்து கொள்வதற்கு, நீங்கள் உங்களுடைய பெருவிரலை உங்கள் கணுக்காலின் உள் பக்கமாக வைத்து, 2-3 செக்கன்கள் இறுக்கமாக அழுத்திப் பிடித்து விட்டு, கையை எடுக்கும் போது, அவ்விடத்தில் பள்ளம் போன்று சில விநாடிகளுக்கு இருக்கும் எனில், உங்களுக்கு கணுக்கால் வீக்கம் இருக்கிறது எனத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, இரண்டு பக்க கால்களிலும் செய்து பார்க்க வேண்டும். இரண்டு கால்களிலும் கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு, சில நோய்கள் இருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். ஒரு பக்கம் மட்டும் கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு வேறு சில நோய் நிலைமைகள் இருக்கக்கூடும். சிலருக்கு இந்த கால் வீக்கம் சாதாரணமானதாக கூட இருக்கலாம். உதாரணமாக, நீண்டதூரம் பிரயாணம் செய்பவர்களுக்கு கால் வீக்கம் ஏற்படலாம். பின்னர் ஓய்வெடுத்த உடன் வீக்கம் சரியாகிவிடும். இவ்வாறு இருந்தால் அது குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் இந்த கணுக்கால் வீக்கம் தொடர்ந்து இரண்டு கால்களிலும் இருக்குமானால், பல்வேறு நோய்கள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. ஆகையால் இது குறித்து கவனம் எடுக்க வேண்டும்.

முதலாவதாக, இதய நோய்கள் இருப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அதிலும் முக்கியமாக வலப்பக்க இதயம் தொழிற்படுவது குறைவாக இருக்கலாம். உதாரணமாக, மாரடைப்பு வந்தவர்கள் மற்றும் இதய வால்வு பிரச்சினை உள்ளவர்களுக்கு கணுக்கால் வீக்கம் வருவதற்குரிய சந்தர்ப்பம் இருக்கிறது. அவர்களுக்கு படியேறும் போது களைப்பு ஏற்படல், அடிக்கடி மார்பு வலி ஏற்படல், நித்திரையில் மூச்சுத் திணறல் ஏற்படல் போன்றவை காணப்படும். இவ்வாறானவர்களுக்கு ஏற்கனவே இதய நோய்கள் ஏற்பட்டிருக்கக் கூடும். இரண்டாவதாக ஈரல் சம்பந்தமான பிரச்சினை உள்ளவர்களுக்கும் இந்த கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது. இலங்கையைப் பொறுத்த வரை, அதிக குடிப்பழக்கம் உள்ள வர்களுக்கு இந்த ஈரல் சம்பந்தமான பிரச்சினை அதிகமாக காணப்படுகின்றது. அவர்களுக்கு இரண்டு பக்க கால்களிலும் வீக்கம் இருக்கக்கூடும். இவ்வாறானவர்களுக்கு கால் வீக்கத்துடன் வயிறு வீக்கமும் இருக்கலாம். அது தவிர சிலருக்கு இரத்த வாந்தி ஏற்படலாம், மலம் கறுப்பாக காணப்படலாம். இவ்வாறான அறிகுறிகளுடன் அதிக குடிப்பழக்கம் உள்ள ஒருவர் வந்தால் அவருக்கு ஈரல் பழுதடைந்திருக்க முடியும்.

மூன்றாவதாக, சிறுநீரகப் பிரச்சினை உள்ளவர்களுக்கும் இரண்டு கணுக்கால்களும் வீங்கி காணப்படலாம். அது தவிர சிறுநீரகத் தொழிற்பாடு குறைந்தவர்கள், உதாரணமாக நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கும் கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். இவ்வாறானவர்களுக்கு, உணவில் நாட்டமற்ற தன்மை, வாந்தி குமட்டல் தன்மை, கண்ணைச் சூழ வீக்கத் தன்மை போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

அடுத்ததாக, சிலருக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லாமல் கூட, அவர்கள் எடுக்கின்ற சில மருந்துகளால் கணுக்கால் வீக்கம் ஏற்படக்கூடும். பிரதானமாக, Amlodipine எனப்படும் உயர் குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கும் மாத்திரையை 5 mg ஐ விட அதிகமாக எடுத்தால் கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அப்படி ஏற்பட்டால் அந்த மருந்து எடுப்பதை நிறுத்தும் போது கால் வீக்கம் படிப்படியாக குறையும். இது தவிர, உடலில் புரதக் குறைபாடு உள்ளவர்களுக்கும் கால் வீக்கம் வரலாம். முதலில் கூறியது போல் சிறுநீரக பிரச்சினை உள்ளவர்களுக்கு சிறுநீரில் புரதம் வெளியேறுவதாலும் மலத்துடன் புரதம் வெளியேறுவதாலும் பிற நோய்கள் காரணமாக புரதம் வெளியேறுவதாலும் உடலில் புரத அளவு குறைந்து கால் வீக்கம் ஏற்படலாம். இவை தான் இரண்டு பக்க கால்களும் வீங்கும் போது நாம் கருத்திற் கொள்ள வேண்டிய நோய் நிலைமைகள் ஆகும்.

இது தவிர ஒரு பக்கம் மட்டும் கால் வீக்கம் காணப்படுவது, பிரதானமாக காலில் கிருமித் தொற்றின் காரணமாக இருக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் காலின் தோல் சிவப்பு நிறத்தில் காணப்படலாம், தோல் மினுமினுப்பு தன்மையுடையதாக இருக்கலாம், தொடும் போது அவ்விடத்தில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படலாம் அல்லது புண் இருக்கலாம். இவ்வாறான நிலை உள்ளவர்களுக்கு அவற்றிற்கு சிகிச்சையளிக்கும் போது கணுக்கால் வீக்கம் குறைவடையும்.

இது தவிர கணுக்கால் வீக்கம் ஏற்படுவதற்கான பிரதானமான காரணமாக கால்களில் ஏற்படும் இரத்தக் கட்டிகள் அமைகின்றன. இதனால் ஒரு பக்க கால் வீக்கம் ஏற்படலாம். இது பிரதானமாக நீண்டதூரப் பிரயாணம், தூர தேச விமானப் பிரயாணம் செய்பவர்களில் அதிகமாக ஏற்படும். இவர்களுக்கு எந்தவொரு பிற அறிகுறிகளும் இல்லாமல் சிறிதளவு வலியுடன் கூடிய கால் வீக்கம் மட்டும் காணப்படும். இது தவிர அரிதாக, யானைக்கால் நோயும் கால் வீக்கத்தை ஏற்படுத்தும். இது முன்பு குறிப்பிட்ட நோய்களில் இருந்து சற்று வித்தியாசமானது. இந்நோய் உள்ளவர்களில் காலின் தோல் மறத்து காணப்படும், கை விரலால் அழுத்தும் போது அமராமல் காணப்படும். இவ்வாறான நிலையில் அவர்களிற்கு தகுந்த சிகிச்சை அளிப்பது அவசியம்.

அடுத்ததாக கணுக்கால் வீக்கம் உள்ளவர்களுக்கு என்னென்ன பரிசோதனைகள் செய்யலாம், எவ்வாறு மருத்துவ சிகிச்சை செய்யலாம் என பார்ப்போம். இவர்களுக்கு பிரதானமாக, சில இரத்த பரிசோதனை செய்ய வேண்டி இருக்கும். அவற்றில் முக்கியமாக ஈரல் சம்பந்தமான பரிசோதனைகள், சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனைகள், உடலில் உள்ள புரதத்தின் அளவு சம்பந்தமான பரிசோதனைகள் மற்றும் சிலசமயங்களில் தைரொய்ட் சம்பந்தமான பரிசோதனைகளும் செய்ய வேண்டி இருக்கும். இது தவிர, சிறுநீரில் சில பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். உதாரணமாக, UFR பரிசோதனை செய்து, சிறுநீரில் புரதம் வெளியேறுமாக இருந்தால் பிற மேலதிக பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். அத்தோடு முன்னரே குறிப்பிட்டது போல, இதய நோய்களும் கணுக்கால் வீக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இதயம் சம்பந்தமான பரிசோதனைகளான ECG, ECHO போன்ற பரிசோதனைகளைச் செய்ய வேண்டி இருக்கும். இது தவிர ஈரல், சிறுநீரகம் சம்பந்தமான மேலதிக பரிசோதனைகளுக்காக Ultra sound scan எனப்படும் பரிசோதனை செய்து வயிற்றுப் பகுதியை scan செய்து பார்க்க வேண்டி ஏற்படும். இவ்வாறான பரிசோதனைகள் செய்வதன்மூலம் அவர்களுக்கு எவ்வகையான நோய் நிலைமைகள் உள்ளன என அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஒற்றைக் கணுக்கால் வீக்கம் வரும்போது இரத்தக் கட்டிகள் உள்ளதா என்று பார்க்க காலில் Venous duplex scan எனப்படும் scan ஐ செய்து பார்க்க வேண்டி ஏற்படும். இது தவிர, யானைக்கால் நோய்க்கான பரிசோதனைகள், CELLULITIS எனப்படும் கிருமித் தொற்றின் அளவைப் பார்ப்பதற்காக சில பரிசோதனைகள் செய்ய வேண்டி இருக்கும். இவற்றை செய்து, எந்த நோய் நிலைமை காரணமாக இந்த கணுக்கால் வீக்கம் ஏற்பட்டுள்ளது என அறியலாம்.

இறுதியாக இவர்களுக்கு எவ்வாறான ஆலோசனைகள் மற்றும் மருத்துவ சிகிச்சைகள் செய்யலாம் என சுருக்கமாக பார்ப்போம். பொதுவாக இதயம், சிறுநீரம், ஈரல் நோய்கள் காரணமாக இரண்டு கால்களிலும் வீக்கம் காணப்படுபவர்கள், உணவில் உப்பை குறைவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தோடு உள்ளெடுக்கும் நீரின் அளவு குறைவாக இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு 1.5 லீற்றர் நீர் அருந்துவதே இவர்களுக்கு போதுமானதாக இருக்கும். உடம்பில் இருந்து நீரினை வெளியகற்ற Diuretics எனப்படும் மருந்து வகை இவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. இது தவிர நீங்கள் சாதாரணமாக இருக்கும் போது காலை கீழே விடாமல் ஒரு கதிரைக்கு மேல் வைத்திருப்பதன் மூலம் கால் வீக்கத்தை குறைத்துக்கொள்ள முடியும். ஆனால் கால் வீக்கத்திற்கு மட்டும் சிகிச்சை செய்தால் காணாது. நம் பொய்யாமொழிப் புலவர் கூறியது போல "நோய் நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்பதற்கு இணங்க நோயை மட்டும் தீர்ப்பதற்கு மருத்துவம் செய்யாமல் அந்த நோய் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கும் மருத்துவ சிகிச்சை செய்வதன் மூலம் இந்த நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க முடியும். அதேபோல், இந்த கணுக்கால் வீக்கத்திற்கும் அது ஏற்பட காரணமான நோய்களுக்கும் சேர்த்து மருத்துவம் செய்து கணுக்கால் வீக்கம் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

Dr.R. கஜந்தன், பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த கட்டத்திற்கு தயார் அறிவித்தது இஸ்ரேல்!



(ஜெருசலேம்)

**ஹமாஸ் படையினருடனான போரில் அடுத்த கட்டத்திற்கு தயாராகி வருவதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது.**

கடந்த 15 நாட்களாக தொடர்ந்து முடிவு காணாமல் நடைபெற்று வரும் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பிற்கு இடையிலான யுத்தத்தினால் இருதரப்பிலுமாக பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் பிற நாடுகளின் பொருளாதாரங்களும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில் கடந்த 7 ஆம் திகதி ஹமாஸின் திடீர் தாக்குதலுக்கு பிறகு போர்ப் பிரகடனத்தை அறிவித்து பதிலடி தாக்குதலை தொடங்கிய இஸ்ரேல், பாலஸ்தீனத்தின் காசா நகரை ரொக்கெட்டுகள் மூலம் உருக்குலைத்து வருகிறது.

இதுவரை நடத்தப்பட்ட தாக்குதலில், ஹமாஸின் நான்கு முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. அத்தோடு, ஹமாஸ் அமைப்புடனான யுத்தம் மேலும் தொடரப் போவதாகவும். போரின் அடுத்த கட்டத்திற்கு தயாராகி வருவதாகவும் இஸ்ரேல் பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பேசிய இஸ்ரேலிய இராணுவ படையின் செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, ஹமாஸ் படையினருக்கு எதிரான போருக்கு இஸ்ரேலிய தற்காப்பு இராணுவ படை தயாராகி வருவதாகவும் அத்துடன் ஹமாஸ் அமைப்பினரால் கடத்தப்பட்ட அனைவரையும் பாதுகாப்பாக மீட்பதும் சாத்தியமான அனைத்து வகைகளிலும் காணாமல் போனவர்களை கண்டறிவதையும் இஸ்ரேல் உளவுத்துறை மற்றும் இராணுவம் மேற்கொள்ளும் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நிவாரணம் வழங்க முடியாதவாறு தாக்குதல் காசா சென்ற ஐ.நா பொதுச் செயலர்

(ஜெருசலேம்)

எகிப்து-காசா எல்லைப் பகுதியான ரஃபா பகுதிக்கு ஐ.நாவின் பொதுச் செயலாளர் அண்டனியோ குட்டரஸ் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் காசா மக்களுக்கு உதவுவதற்காக வந்திறங்கிய நிவாரணப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார்.

சுமார் 200 கனரக வாகனங்களில் நிவாரணப் பொருட்கள் ஏற்றப்பட்டு ரஃபா எல்லையில் நிறுத்தப்பட்டிருந்தது.

நிவாரணப்பொருட்களை விநியோகிக்க முடியாதவாறு இஸ்ரேல் தாக்குதல்களை நிகழ்த்தி வந்தமையால் நிவா ரணப்பொருட்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனவே நிவாரணப் பொருட்களை விநியோகிப்பதற்காக தாக்குதல்களை நிறுத்துமாறு ஐ.நா இஸ்ரேலுடன் பேச்சு வார்த்தைகளை நிகழ்த்தியுள்ளது.

இதன் விளைவாக, அடுத்த சில நாட்களில் காசா பகுதிக்கு இந்த நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்லப்படும் என் ஐ.நாவின் செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் தெரிவித்துள்ளார். (நி)

# சந்திரயான்-3 ரோவருக்கு புதிய அச்சுறுத்தல்

(டில்லி)

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ சார்பில் சந்திரயான்-3 கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

நிலவில் தரையிறங்கிய ரோவர் தொடர்ச்சியான சோதனை நடத்திய பிறகு அது தற்போது நிலவில் தூக்க நிலையில் உள்ளது.

இதனால் அதற்கு புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளது.

நிலவின் மேற்பரப்பில் அடிக்கடி நுண் விண்கற்கள் விழும். நிலவில் நுண் விண்கற்கள் விழும் போது குண்டு வெடித்தால் ஏற்படுவது போன்ற பாதிப்பு ஏற்படும். தற்போது நிலவில் நுண் விண்கற்கள் விழுகிறது. சந்திரயான்-3 ரோவர் நிலவின் தூங்கும் நிலையில் அந்த பகுதியில் நுண் விண்கல் விழுந்தால் அது ரோவருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது. ரோவர் மீது நுண் விண்கல் விழுந்தால் அது வெடித்துச் சிதறும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. (நி)

# வைரத்தால் ஜொலித்த துர்க்காதேவி

(டில்லி)

ராஜஸ்தானில் சுரு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 25 ஆயிரம் அமெரிக்க வைரங்களால் அலங்கரிக்கப்பட்ட துர்க்கா சிலையின் வீடியோ மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

பெங்காலி கைவினை கலைஞர்கள் சுமார் 3 மாதமாக இந்த சிலையை வடிவமைத்துள்ளனர். பிரமிக்க வைக்கும் இந்த சிலை 9.5 நீளமும் 4.5 அடி அகலமும் கொண்டது.

சுரு மாவட்டத்தில் சக்சன் பவனில் வைக்கப்பட்டுள்ள இந்த துர்க்கா சிலை சிங்கத்தின் மேல் அமர்ந்திருப்பதை காட்டுகிறது. (நி)



# அமெரிக்க பணய கைதிகளை விடுவித்தது ஹமாஸ்

(ஜெருசலேம்)

ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் நாட்டிற்குள் புகுந்து தாக்குதல் நடத்தில் 200 இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்ற ஹமாஸ் அமைப்பு இரண்டு அமெரிக்க பணயக்கைதிகளை விடுவித்துள்ளதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய் மற்றும் அவரது மகள் ஆகிய இரு அமெரிக்க பிரஜைகளே விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காஸா பகுதிக்கு அருகாமையில் உள்ள இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள தமது நண்பர்கள் வீட்டிற்கு இவர்கள் வந்த வேளை இடம்பெற்ற ஹமாஸ் நடவடிக்கையில் இவர்கள் கடத்தப்பட்டனர். (நி)

# இந்தியாவிலுள்ள துணைத்தூதரகங்களில் விசா சேவைகளை இடைநிறுத்தியது கனடா

## 41 கனேடிய இராஜதந்திரிகளும் வாபஸ்

(டில்லி)

இந்தியாவில் பெங்களூர், சண்டிகர் மற்றும் மும்பாய் ஆகிய பிராந்தியங்களிலுள்ள துணைத் தூதரங்களில் வழங்கப்பட்டு வந்த விசா மற்றும் நேரடித் தூதரக சேவைகளை கனடா தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்துள்ளது.

இந்திய காலிஸ்தான் பிரிவினைவாதத் தலைவர் ஹர் தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி கனேடிய மண்ணில் வைத்துக் கொல்லப்பட்டதற்கு இந்திய அரசாங்கத்திற்கு தொடர்புள்ளதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த மாதம் தெரிவித்ததையடுத்து, இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் முறுகல் நிலையை அடைந்தன.

இந்தியாவானது மேற்படி குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித்து தீவிரவாதிகளுக்கும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் கனடா புகலிடம் அளித்து வருவதாக சாடியிருந்தது.

இந்நிலையில், புதுடில்லியிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயம் மட்டுமே மேற்படி சேவைகளை தொடர்ந்து வழங்கவுள்ளது.

இந்தியாவிலிருந்து 41 கனேடிய இராஜதந்திரிகள் வாபஸ் பெறப்பட்டுள்ளதாக கனேடிய வெளிநாட்டு அமைச்சர் மெலானி ஜோலி கடந்த வியாழக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளார். (நி)

# அணுகுண்டு இருப்பை அதிகரித்துள்ளது சீனா

## பென்டகன் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

சீனா கடந்த ஆண்டு அதன் அணுஆயுத இருப்புகளை கணிசமாக விரிவுபடுத்தியுள்ளது. தற்போது சுமார் 500 செயற்பாட்டு அணு ஆயுதங்களை வைத்திருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்புத் துறையின் தலைமையகமான பென்டகன் வெளியிட்ட ஆண்டு அறிக்கையில், பீஜிங் 2030 ஆம் ஆண்டுக்குள் அதன் ஆயுத இருப்புகளை இரட்டிப்பாக்கி 1,000 அணுகுண்டுகளுக்கு மேல் வைத்திருக்கும் என நம்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சீனா "முதலில் தாக்க மாட்டோம்" கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறது.

அறிக்கையில் ஆயுத இருப்புகளின் அதிகரிப்பு எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பதாகக் கூறப்பட்டாலும் சீனாவின் இருப்புகள் இன்னும் ரஷ்யா மற்றும் அமெரிக்காவின் இருப்புகளை விட குறைவாகவே உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் கூற்றுப்படி, ரஷ்யா சுமார் 5,889 போர் ஏவுகணைகள் கொண்ட அணு ஆயுத இருப்பை கொண்டுள்ளது, அதேநேரத்தில் அமெரிக்கா 5,244 அணு ஆயுதங்களை வைத்திருக்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போலி விசாவில்

# இங்கிலாந்து செல்ல முயன்ற யாழ்.இளைஞன் கைது

(கொழும்பு)

போலி விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக இங்கிலாந்துக்கு செல்ல முயன்ற யாழைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலைய புறப்படும் முனையத்தில் வைத்து குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த 23 வயது இளைஞன் ஆவார்.

குறித்த இளைஞன் கட்டார் ஏர்வேஸ் விமானத்தில் டோஹா சென்று அங்கிருந்து இங்கிலாந்துக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

பின்னர் அவர் பயண அனுமதிக்காக விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் தனது விசா மற்றும் ஏனைய ஆவணங்களை ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து அனைத்து ஆவணங்களையும் சோதனையிட்ட அதிகாரிகள், விசா போலியானது என உறுதி செய்த நிலையில், குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிகரிக்கும் தொழுநோயாளர்கள்

### செப்டெம்பரில் மட்டும் 175 பேர் அடையாளம்

(கொழும்பு)

**இலங்கையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஒரு வருடத்தில் 1,135 தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டதாக தொழுநோய் பிரசாரம் அறிவித்திருக்கின்றது.

செப்டெம்பர் மாதத்தில் மட்டும் 175 தொழுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அதன் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதிய நோயாளர்களை அடையாளம் காண, அதிக நோயாளர்கள் பதிவாகும் பகுதிகளை வரைபடமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நிபுணர் பிரசாத் ரணவீர மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

### குடிபோதையில் சாரத்தியம்

# கைது செய்யும் பொலிஸாருக்கு 5 ஆயிரம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ.5,000 என்ற அடிப்படையில் உதவித்தொகை வழங்கும் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது டிசெம்பர் இறுதி வரை மூன்று மாதங்களுக்கு முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்படும் என பொலிஸ் போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களால் ஏற்படும் விபத்துக்களை தடுக்கும் வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு சலுகைகள் காரணமாக, குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்வதில் பொலிஸ் அதிகாரிகள் அதிக ஆர்வம் காட்டுவார்கள்.

குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்களை கைது செய்யும் போது, அவர்கள் குடிபோதையில் இருப்பதை உறுதி செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி அபராதம் விதிக்க வேண்டும். (நி)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## துலாம்

**உதவும் குணத்தால் உள்ளத்தில் இடம்பிடித்த துலாம் இராசி வாசகர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். மேஷத்தில் உள்ள குரு உங்கள் இராசியையும் இராசிநாதன் சுக்கிரனையும் பார்க்கின்றார். எனவே இந்த மாதம் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும் மாதமாக அமையப் போகின்றது. எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். மாங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும். தங்கு தடைகள் தானாக விலகும்.

**சனி வக்கிர நிவர்த்தி**

ஐப்பசி மாதம் 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் இராசிக்கு இப்பொழுது அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. வக்கிர நிவர்த்தியான பின்பு அதன் பலம் கூடுகின்றது. சுபச்செலவுகள் அதிகரிக்கும். துணிந்து முடிவெடுத்து நல்ல மாற்றங்களை வரவழைத்துக் கொள்வீர்கள். ஆன்மிகப் பற்று அதிகரிக்கும். வெளிநாடு அல்லது வெளியூர் செல்லும் வாய்ப்பு உருவாகும். உடல் நலனுக்காக ஒரு தொகையைச் செலவிடும் வாய்ப்பு உண்டு. பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம். அதனால் மனக்கலக்கம் உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வேறு வேலைக்கு மாறும் ஆர்வம் உருவாகும்.

**குரு வக்கிரம்**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகை கிரகமாகும். எனவே அவர் வக்கிரம் பெறுவது நன்மை தான். எதிரிகள் பலமிழக்கும் இந்த நேரத்தில் சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். உத்தியோகத்தில் எதிர்பாராத விதத்தில் உயர்வுகளும் ஊதிய உயர்வும் கிடைக்கலாம். நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரும் நேரமிது.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. அதேநேரத்தில் சுக்கிரன் அஷ்டமாதிபதியாகவும் விளங்குவதால் இழப்புகளை ஈடுசெய்ய நல்ல வாய்ப்புகளும் வந்து சேரும். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலம் சீராகும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் பலமடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி மகிழ்ச்சியைத் தரும். குறுக்கீடு சக்திகள் அகலும். கொடுக்கல் -வாங்கல்கள் சரள நிலைக்கு வரும்.

**விருச்சிக புதன்**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது தனவரவு திருப்தி தரும். அதேநேரம் விரயங்களும் கொஞ்சம் கூடுதலாகத் தான் இருக்கும். வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகள் நிகழும் நேரமிது. வரும் மாற்றங்களால் நல்ல ஏற்றங்கள் வரலாம். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது நடைபெறும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் அதில் புதுத்துறையைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்ய முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். கலைஞர்களுக்கு எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மாணவ-மாணவியர்களுக்கு ஆசிரியர்களின் வழிகாட்டுதல் மூலம் படிப்பு சிறப்பாக அமையும். பெண்களுக்கு குடும்பத்தில் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பொருளாதார நிலை திருப்தி தரும். விலை உயர்ந்த பொருட்களையும், சொத்துக்களையும் வாங்கும் சூழ்நிலை உண்டு.

## விருச்சிகம்

**நல்ல யோசனைகளை அள்ளி வழங்கும் விருச்சிக இராசி வாசர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் செவ்வாய் 12 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகின்றது. எனவே குருமங்கள யோகம் உருவாகின்றது. மேலும் சூரியனும் புதனும் இணைந்து "புத ஆதி த்ய யோகம்" உருவாகின்றது. எனவே தொழில் வெற்றிநடைபோடும். தொகை வரவு திருப்தி தரும். ஒப்பந்தங்கள் ஒவ்வொன்றாக வந்து உள்ளத்தை மகிழ்விக்கும்.

**சனி வக்கிர நிவர்த்தி**

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியாகிறது. உங்கள் இராசிக்கு சகாயஸ்தானம் மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சனி. அவர் பலம்பெறும் இந்த நேரம் பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். அருள் தன்மை மிக்க உங்களுக்கு அடுத்து நடக்கப் போவதை யூகித்து அறியும் ஆற்றல் உள்ளதால் எதற்கும் கவலைப்பட மாட்டீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் நீங்கள் கேட்ட சலுகைகளை வழங்குவர்.

**குரு வக்கிரம்**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் வக்கிரம் பெற்றுச் சஞ்சரித்தாலும் அவரது பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் தனவரவு தாராளமாக வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. கட்டிய வீட்டைப் பழுது பார்க்கும் அமைப்பும் சிலருக்கு கைகூடும். அண்ணன்-தம்பிகள் அரவணைப்போடு எண்ணிய காரியங்களை எளிதில் முடிப்பீர்கள்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

ஐப்பசி16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம் தான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்பதற்கு ஏற்ப திடீர் முன்னேற்றங்களும் நல்ல மாற்றங்களும் வரலாம். அதேசமயம் 7 இற்கு அதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே கொஞ்சம் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. உத்தியோகம் தொடர்பாக வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகள் ஆச்சரியப்பட வைக்கும்.

**விருச்சிக புதன்**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டமலாபாதிபதியானவர் புதன். அவர் உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் இந்த நேரம் ஒரு பொன்னான நேரமாகும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை நடத்திக் கொடுப்பர். வியாபாரம் சூடு பிடிக்கும். வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து உள்ளத்தை மகிழ்விக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும். தொழில் வியாபாரம் செய்பவர்கள் துணிந்து எடுத்த முடிவால் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வும் பதவி உயர்வும் வந்து சேரும். கலைஞர்களுக்கு கௌரவம், அந்தஸ்து உயரும். மாணவ-மாணவிகளுக்கு படிப்பில் வெற்றி உருவாகும். பெண்களுக்கு பொருளாதார நிலை உயரும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரும். நல்லவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைப் பண்பு என்பது தற்சார்பற்று இருத்தல் நலம். தன்னலம் கருதிய தலைமை இன்றைய நிலைமையில் நிர்வாகத்தை தலைகீழாக மாற்றும் வல்லமை கொண்டது. ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் இளைஞர்கள் மீது அவதானம் செலுத்துங்கள்

உலகில் யூத இனம் பல்வேறு இன்னல்களைச் சந்தித்த போதிலும் இன்றுவரை யூதர்கள் தமது அடையாளத்தைச் சிதைய விடாமல் பாதுகாத்து வருகின்றனர்.

ஆம், யுத்தம் காரணமாக யூதர்கள் உலக நாடுகள் பலவற்றில் குடியேறினர்.

அவ்வாறு தமது நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து உலக நாடுகளில் குடியேறிய யூதர்கள் அந்த நாடுகளின் கலாசாரத்துக்குள் அமிழ்ந்து விடாமல், தமது இனத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பதில் மிகத் தீவிரமாக இருந்தனர்.

உண்மை. யூதர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் யூதர்களாகவே வாழ்கின்றனர். இதுதான் அவர்களின் தனித்துவம்.

இங்குதான் எங்கள் ஈழத் தமிழினம் பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அதாவது உள்நாட்டில் ஏற்பட்ட கொடும் போர் காரணமாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களில் ஒரு சிறுபகுதியினரைத் தவிர, ஏனையவர்கள் தமிழின அடையாளத்தைப் பாதுகாப்பதினின்றும் விலகியுள்ளனர்.

அதாவது தங்களை ஈழத் தமிழர்கள் என்று நிலைநிறுத்துவதில் அவர்களுக்கு உடன்பாடில்லை.

தவிர, தமது பிள்ளைகளுக்குத் தமிழைக் கற்றுக் கொடுப்பதிலோ அன்றி தாயகத்துக்கு அவர்களை அழைத்து வந்து தாய்த் தேசத்தைக் காட்டுவதிலோ ஆர்வமில்லை.

ஆக, நாங்கள் தமிழர்களாக வாழ்கின்றோம். அதற்காக எங்கள் பிள்ளைகளையும் தமிழ்ப் பற்றோடு வளர்க்க வேண்டும் என்று நாம் நினைக்கவில்லை. அவ்வாறு யாரும் எதிர்பார்க்கவும் கூடாது.

அவர்கள் தாம் வாழுகின்ற நாட்டில் எவ்வாறான சுதந்திரம் எவ்வாறான உரிமை இருக்கின்றதோ அதன் வழியில் அவர்களை வாழவிட்டுள்ளோம் என்பதாக நிலைமை இருக்கும்போது எமது தமிழ் இனத்தின் அடையாளம் மெல்ல மெல்ல இழக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதுதான் புலம்பெயர் தமிழ் உறவுகளில் ஒரு பகுதியினரின் நிலைப்பாடு என்றால், எங்கள் தாயகத்தில் நிலைமை இன்னும் மோசம் எனலாம்.

ஆம், எங்கள் மண்ணில் நிகழ்ந்த தியாகங்கள் அத்தனையையும் மறந்துவிட்டவர்கள் பலர் இன்று நம் மத்தியில் உள்ளனர்.

அவர்கள் தமிழினப் பற்றை விமர்சிக்கின்றனர்.

கூடவே எங்கள் தமிழ் இளைஞர்களில் ஒரு பகுதியினர் வீதிகளில் நின்று காலத்தை வீணடிப்பதை இத்தகையவர்கள் ஊக்குவிக்கின்றனர்.

இந்த நிலைமை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இஃது தொடருமாயின், எங்கள் தாயகத்து வீதிகளில் இனி யாரும் தனித்து நடமாட முடியாது என்றளவில் மிகப் பெரும் பயங்கரம் நிகழக்கூடிய வாய்ப்புகள் உண்டு. கவனம்.

# இலங்கையை ஸ்மார்ட் நாடாக கட்டியெழுப்புவதே நோக்கம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

இலங்கையை ஸ்மார்ட் நாடாக கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஸ்மார்ட் நாடு - 2048 ஐ வெல்வோம்" என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில், திருத்தப்பட்ட கட்சியின் புதிய யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஒன்லைன் மூலம் அமைப்புக்களை உருவாக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு சந்தர்ப்பம் வழங்கி கட்சியை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பில் இந்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஸ்மார்ட் நாட்டிற்கு முன், ஐக்கிய தேசியக் கட்சி ஸ்மார்ட் கட்சியாக கட்டியெழுப்பப்பட வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்தினார்.

"என்னில் இருந்து ஆரம்பிப்போம்" என்ற குறியீட்டை அமைச்சர் மனுஷ நாணயக்கார ஜனாதிபதிக்கு அணிவித்தார்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

ஸ்மார்ட் நாட்டைக் கட்டியெழுப்ப சகல துறைகளிலும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்றும், அதற்காக அரச நிறுவனங்களிலும் அரசியல் கட்சிகளிலும் ஊழலைக் கட்டுப்படுத்த பல கட்டளைச் சட்டங்கள் கொண்டுவரப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, எதிர்காலத்தில் நாட்டுக்காக பரந்த பங்களிப்பை வழங்குவதற்கு ஸ்மார்ட் கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வர வேண்டுமெனவும் வலியுறுத்தினார். (ம-7)

## கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கல்வி அமைச்சுக்கு முன்பாக நாளை மறுதினம் 24 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு ஆசிரிய - அதிபர் தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த சபை தீர்மானித்துள்ளது என அதன் பிரதி இணைப்பாளர் ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை செயற்பாடுகளுக்கு போதுமான நிதியை வழங்குதல் உள்ளிட்ட சில காரணங்களை முன்னிறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

30 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

## புதிய உயர்ஸ்தானிகர்களை நியமிக்க அனுமதி

புதிய உயர்ஸ்தானிகர்கள் இருவர் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அதற்கமைய, பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக அட்மிரல் (ஓய்வுபெற்ற) ரவீந்திர சந்திரசிறி விஜேகுணரத்னவை நியமிப்பதற்கு, கியூபா குடியரசின் இலங்கை உயர்ஸ்தானிகராக அட்மிரல் (ஓய்வுபெற்ற) தமித் நிஷாந்த சிறிசோம உலுகேதன்னவை நியமிப்பதற்கு உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக, நேபாளத்துக்கான இலங்கைத் தூதுவராக எயர் சீப் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சுதர்ஷன கரகொட பதிரனவை நியமிப்பதற்கும் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார். (ம-7)

## காசாவிலுள்ள இலங்கையர்களை விரைவில் மீட்க நடவடிக்கை

(ஜெருசலேம்)

காஸா பகுதியில் சிக்கியுள்ள இலங்கையர்களை விடுவிக்க இராஜதந்திர மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாலஸ்தீனத்தில் உள்ள இலங்கை பிரதிநிதிகள் அலுவலகத்தின் தலைவர் பென்னட் குரே தெரிவித்துள்ளார்.

எகிப்து மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகங்கள் ஊடாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 4,000ஐ கடந்துள்ளது. அவர்களில் இலங்கைப் பெண்ணும் அடங்குவர்.

இதேவேளை அனுலா ரத்நாயக்க என்ற பெண்ணின் சடலம் கூடிய விரைவில் அவரது குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

## மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல்

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என மின் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனுமதி சட்ட விரோதமானது என அந்த சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார்.

வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த 04 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் மின் கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, 18 வீதத்தில் இருந்து 20 வீதம் வரையான மின் கட்டண அதிகரிப்பை மேற்கொள்ள இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜனாதிபதித் தேர்தல் போட்டியிடும் வேட்பாளரின் வைப்புத் தொகை 26 லட்சமாம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கட்டுப்பணம் செலுத்த வேண்டிய பிணைத் தொகையை 26 இலட்சம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கமைய, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றிலிருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இதுவரை 50,000 ரூபாவை வைப்புத் தொகையாக செலுத்தி வந்தனர். அதனை தற்போது 26 இலட்சம் ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

சுயேட்சை வேட்பாளர் வைப்புச் செய்ய வேண்டிய தொகை தற்போது ரூ.75,000 ஆக உள்ளது. அதை ரூ.31 லட்சமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வைப்புச் செய்யப்பட்ட தொகையில் ஒரு இலட்சம் ரூபாயை திரும்ப செலுத்த முடியாத வைப்புத்தொகையாகவும் மீதியை திரும்பப்பெறக்கூடிய வைப்பாகவும் வைப்புச் செய்ய முன்மொழியப்படவுள்ளது.

இதேவேளை, பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் வேட்பாளர்கள் வைப்பிலிட வேண்டிய வைப்புத் தொகையை அதிகரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் கட்டணங்கள் வாழ முடியாமல் தவிக்கும் மக்கள்

## சிறீதரன் எம்.பி ஆதங்கம்



(தருமபுரம்)
மக்கள் இந்த மண்ணில் வாழ முடியாத சூழலை அரசாங்கம் உருவாக்கி வருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தருமபுரம் அரசினர் தமிழக்' கலவன் பாடசாலையின் வைர விழாவில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதியினை பெறுவதற்காக நாட்டு மக்களுக்கு பெரும் சுமையை கொடுத்துவருகிறது.

இதற்காக மின்சார கட்டணம் மற்றும் எரிபொருள், சமையல் எரிவாயு என்பன வற்றின் விலைகளை தாம் நினைத்தவாறு அதிகரித்து வருகிறது.

தற்பொழுது இந்த நாட்டில் அரச ஊழியர்களின் சம்பளமோ அல்லது தனியார் ஒருவரின் நாளாந்த சம்பளமோ அதிகரிக்கப்படவில்லை.

வெறுமனே அரசாங்கம்தான் நினைத்தவாறு பொருட்களின் விலைகளை அதிகரித்து வருகிறது இதன் காரணமாக இந்த நாட்டில் மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-316)



முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட கள்ளப்பாடு தெற்கு முகிலன் முன்பள்ளியில் இணையவழி இலத்திரனியல் கல்வி முறைமை நிகழ்ச்சித்திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த அமரர்.லூயிஸ் போல் நினைவாக, அவரது குடும்பத்தினரால் நிதி உதவி அளிக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)



கிளி/தருமபுரம் இலக்கம் 1 அரசினர் தமிழக் கலைவன் பாடசாலை 65 ஆம் ஆண்டில் கால்பதிக்கும் நாளின் முதல்நாள் நிகழ்வில் பாரம்பரிய கலாசார உடைகளில் நடைபவனி நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-தேவானந்தன்)

# சிறுவர்தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்ட நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் அலுவலகத்தினால் நடத்தப்படும் சிறுவர் தின விழா இன்றைய தினம் காலை 9 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் யாழ். மாவட்ட நன்னடத்தை அலுவலக சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் சி. புவனேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது

இதில் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொள்ளவுள்ளதோடு சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாதனும் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் மாலை நேர நிகழ்வுகள் 2மணிக்கு ஆரம்பமாகவுள்ளதோடு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ் கலந்து கொள்ளவுள்ளதோடு வடமாகாண பிரதம செயலாளர் எஸ் .எம். சமன் பந்துலசேன சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (நி)

# மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும் 'ஜனசபா' அங்குரார்ப்பண நிகழ்வு

(முல்லைத்தீவு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவரும் முகமாக ஜனசபா அங்குராப்பண நிகழ்வு நேற்று காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள அமைப்புக்களையும் ஏனைய இளைஞர், யுவதிகளையும் உள்வாங்கி ஜனசபா செயற்குழுவில் 25 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் ஜனசபா செயற்குழு முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட அங்குராப்பணமாகும். இதேபோல் ஏனைய மாவட்டங்களிலும் செயற்குழு தெரிவு செய்யப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.குணபாலன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க.கனகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சிவராஜசிங்கம் ஜெயகாந், தேசிய ஜனசபா செயலக அதிகாரிகள், மாவட்ட செயலக பதில் திட்டமிடல் பணிப்பாளர் கணேசமூர்த்தி ஜெயபவானி, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலர் வே.மேகானந்தசிவம், புதுக் குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 260 | 200 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 300 |
| தக்காளி | 220 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 160 | 120 |
| கோவா | 200 | 160 | 180 | 200 |
| கரட் | 250 | 280 | 250 | 350 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 100 | 240 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 260 | 220 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 200 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 | 160 |
| பயற்றங்காய் | 350 | 350 | 300 | 300 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 250 |
| கறிமிளகாய் | 400 | 300 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 200 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 250 | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | — | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 200 |

# பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக யாழில் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)
காசாவில் இஸ்ரேலியப் படைகள் மேற்கொண்டுவரும் யுத்த நெறிமுறைகளையும் மீறிய தாக்குதல்களினால் மிகப் பெரும் மனிதப்பேரழிவுக்கு ஆளாகியிருக்கும் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக அவர்களுக்கு நீதி வேண்டியும், இஸ்ரேலைக் கண்டித்தும் நேற்று சனிக்கிழமை யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் பலர் கலந்துகொண்டு பாலஸ்தீன மக்களுக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தினர். (நி-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்தம்...

நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது இயங்கி வரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள், எரிபொருள் விநியோக நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

எரிபொருள் விலை திருத்தம் தினசரி மேற்கொள்ளப்படும் என முன்னரும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## முல்லையில்...

அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வீடு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அதே திசையில் பயணித்த பாரஊர்தி மோதி விபத்துக்குள்ளானது.

பார ஊர்தியின் சாரதி தப்பி சென்றுள்ள நிலையில் அவரைக்கைது செய்ய பொலிஸார்நடவடிக்கை எடுத்துள்ளனர்.



















இந்த நிலையில் பொலிஸாருக்கும், பொதுமக்களிற்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. சம்பவ இடத்திற்கு மாங்குளம் தலைமைப் பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் விரைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7,100)

## பேக்கரி...

உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண திருத்தத்தின் காரணமாக பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படவில்லை எனவும்,

ஆனால் அதிக செலவினங்களால் தற்போது பேக்கரி தொழில் நலிவடைந்துள்ளதாகவும் அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். (ம-7)

## காங்கேசன்துறை...

படுகின்றன.

மும்பையில் இடம்பெற்ற சர்வதேச கடல்சார் மாநாட்டின்போது, துபாய் நிறுவனமொன்றுடன் தூத்துக்குடி வ.உ.சி துறைமுக ஆணையம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் கப்பல் போக்குவரத்திற்காக இலங்கையில் அனுமதி பெறும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக துறைமுக அதிகாரிகளை மேற்கோள் காட்டி தமிழக செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இதன்மூலம் தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தை மையமாகக் கொண்டு பல்வேறு இடங்களுக்கு கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பலில் 300 பயணிகள் பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கப்பல் இன்னும் 2 மாதங்களில் தூத்துக்குடி துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக வ.உ.சி துறைமுக ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அதன் பின்னர் உடனடியாக தூத்துக்குடி - காங்கேசன்துறை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளது.

தொடர்ந்து, கொழும்பு - இராமேஸ்வரம் - தூத்துக்குடி - கன்னியாகுமரிக்கு இடையே கப்பல் சேவை முன்னெடுக்கப்படும் எனவும் தமிழக செய்திகள் குறிப்பிட்டுள்ளன. (ம-7)

## அமெரிக்கா...

முகாமில் பணிபுரிந்துள்ளார்.

பாணந்துறை வடக்கு பொலிஸாருக்கு 5 முறைப்பாடுகள் மற்றும் தெஹிவளை, கல்கிசை உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்களுக்கு பண மோசடி தொடர்பில் கிடைத்த பல முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய பெண்ணின் வீட்டில் ஐந்து கடவுச்சீட்டுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 42 இலட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேகநபரான பெண்ணின் கணவரான மேஜரின் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-7)

## யாழ்.போதனா...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட படுகொலையை மறைக்கவே அதே நாளில் இசை நிகழ்ச்சி நடத்தப்படுவதாக சர்ச்சைகள் எழுந்த நிலையில் இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, கலையும் கலாசாரமும் சிறந்து ஓங்கும் இந்த யாழ் மண்ணில் யாழ்கானம் என்ற இந்த இசை நிகழ்ச்சியை அளிப்பதில் சந்தோஷ் நாராயணனும் அவர் குழுவினரும் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர்.

இம் மண்ணும் இம்மண்ணில் வாழும் மக்களும் கண்ட துயர்கள் அநேகம். ஒரு வருடத்தின் 365 நாட்களில் எந்த திகதியையும் எடுத்து வரலாற்று ஏடுகளைப் பின்னோக்கி புரட்டினாலும் அத்திகதியில் ஒரு கொடூர சம்பவம் ஒரு துயர்மிகு சம்பவம் நிகழ்ந்திருக்கும்.

ஏன், இன்றும் இத்திகதியில் சரியாக 36 வருடங்களுக்கு முன் யாழ் வைத்தியசாலையில் நடந்த கொடூரமான நிகழ்வை நாம் துயருடன் நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம். கலை நிகழ்ச்சிகள் உள்ளத் துயர்களை நீக்கும் மருந்தாவன. அதனால் சந்தோஷ் நாராயணனும் அவரது குழுவும் இவ்விசை விருந்தை ஒரு இசை மருந்தாகவே மக்களுக்கு வழங்குகின்றனர்.

ஆதலால் பல தசாப்தங்களாக நடந்த கொடிய யுத்தத்தில் மறைந்த எம் நாட்டு மக்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு இம் மருந்தை அருந்துவதே பொருத்தமானதாய் இருக்கும்.

இயலுமானவர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறோம் என தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அனைவரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியை உயிரிழந்தவர்களுக்கு செலுத்தினர். (ம-7,33)

## புதுக்...

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இஸ்ரேல் - பலஸ்தீன மோதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரேல், பலஸ்தீன் பகுதிகளில் இடம்பெறும் கொலைகளுக்காக எமது கண்டனங்களை தெரிவிக்கின்றோம். அங்கு பாரியளவில் மனித அவலங்கள் இடம்பெற்று வருகின்றன.

அது சிறிய நாடாக இருந்தாலும் நாங்கள் ஒன்றும் தெரியாதது போன்று நடுநிலையாக இருந்துவிட முடியாது. சரி பிழைகள் தொடர்பில் கூற வரவில்லை இரு தரப்பின் நியாயங்கள், அநியாயங்கள் தொடர்பில் கதைப்பதற்கான நேரமல்ல.

வன்முறைகளை எதிர்க்க வேண்டும். இரு தரப்பினரும் யுத்தத்தை நிறுத்தி மனித அவலங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைத்தியசாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. எமது நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

காஸாவில் வைத்தியசாலை மீதான தாக்குதலை கண்டிப்பவர்கள் இங்கே வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் எதுவும் கதைக்கவில்லை.

இங்கேயும் அரச பயங்கரவாதமே இருந்தது. எவ்வகையான வன்முறையாக இருந்தாலும் அவை கண்டனத்திற்குரியதே. இஸ்ரேல் காஸாவை விட்டு விலக வேண்டும். எவராக இருந்தாலும் மக்கள் உயிர்களை பறிக்க எந்த உரிமையும் கிடையாது என்றார். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1982 ஆம் ஆண்டு பிறந்த ஆயிலிய நட்சத்திரமுடைய கனடா வதிவிட வாய் பேச முடியாத மணமகனுக்கு வாய் பேச முடியாத மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் தற்போது இலங்கையில் உள்ளார். (17434)

**077 990 6867**
**077 214 0220**

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7464)
**0777-068-777**
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

## அமெரிக்க அதிஸ்ட விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இன்னும் 12 நாட்களே

இந்த வருடம் A/L

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 TRAVELS

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17489)

## மணிவிழா வாழ்த்து



யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலையில் 13 வருடங்கள் அளப்பெரும் சேவையாற்றி இன்றைய தினம் 22.10.2023 மணிவிழாக் காணும் எமது ஆசிரியை

திருமதி
**விஜயராணி பாலச்சந்திரன்**

அவர்களுக்கு உளமார்ந்த மணிவிழா வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேவை விபரம்
01.09.1992 - 17.02.2010
யா/தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை
18.02.2010 - 22.10.2023
யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை

Best Wishes!

வாழ்த்துவோர் :
பாடசாலைச் சமூகம்
யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை
வட்டு. வடக்கு, சித்தன்கேணி
(17542)

## இராஜ மருத்துவம்

குழந்தைகள் கிரந்தி, அவியல், சளி, இருமல், செவ்வாப்பு, கிரந்தி முட்டு கணை நோய்களுக்கும் குளோகோமா, சூதக வலி, ஆனந்த வாயுவுக்கும் சிகிச்சை பெறவும், கோறோசனை மாத்திரை கிரந்தி எண்ணெய் பெற்றுக் கொள்ளவும்.
பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம்
சிறப்பு ஆலோசகர், T.P : 076 274 4488
வல்லை வீதி, சங்கானை (C-7461)

## VILLAGE HOTEL

பஸ் சேவை
JAFFNA EXPRESS
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17484)
T.P:077 544 8503

## விற்பனைக்கு

Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (17504)

**071 649 2654**

## விமலம் திருமண சேவை

கனடா, இலங்கை
தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற உள்நாடு, வெளிநாடு வரன்கள் தாராளமாக உள்ளன. (17455)
கனடா
+16476571347 / +14372446737
இலங்கை
**077 240 9276**

## ICT வகுப்புக்கள் | திரு.இ.குமரன் ICT

R.Kumaran-B.Sc.

| GCE (O/L) | Grade 10 | Gr.6,7,8,9 |
|---|---|---|
| Theory / Practical | Theory / Practical | Theory |
| Unit Exam | Unit Exam | Practical |
| | | Unit Exam |
| Paper Class | Paper Class | Robotics |

Eng. & Tamil Medium

யாழில் ICT இல் அதிக A சித்தி பெறும் நிறுவனம் 100%
ICT துறையில் 20 வருட கற்பித்தல் அனுபவம் Practical-Oriented Class
Gr.6 - 11 - Arduino / Robotics / Programming Classes (17523)
MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna & Kondavil East,Kondavil.

## 50% விலை கழிவில் பந்தல் விற்பனைக்கு

தகர பந்தல், கதிரைகள், மேசைகள், சமையல் பாத்திரங்கள், விற்பனைக்கு உண்டு. புதிதாக தொழில் தொடங்குபவர்களுக்கும் ஏற்கனவே பந்தல் சேவை நடத்துபவர்களுக்கும் இலாபகரமானது. (17518)

**077 210 5286**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH *Special offer for all the courses*
- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS புதிய பிரிவுகள் ஆரம்பம் (17459)
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970

## Happy Kiddies Montessori (AMI) & Teacher Training Center

Happy Kiddies Montessori
(2+ - 5+)
Admission Free For Navarathri Month(October)
Free Abacus & Elocution Classes (Age 4+)
ACTIVITIES// MATERIALS BASED LEARNING Method
பிரத்தியேக வகுப்புக்கள் இடம்பெறுகின்றன
We are Conducting Classes
விஜயதசமியன்று புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன (17532)

- Music சங்கீதம்
- Violin வயலின்
- Miruthangam மிருதங்கம்
- Piano/ Keyboard பியானோ
- Tabla தபேலா
- Art சித்திரம்
- Bharatanatyam பரதநாட்டியம்
- Chess செஸ்
- Abacus
- Sinhala சிங்களம்
- English Speech Club for Kids



இல.241, ஆவரங்கால் வீதி, அச்சுவேலி தெற்கு.
(வைத்தியசாலைக்கு அருகாமை)
Contact : 076 402 9397, 075 931 8369, 021 315 6900

## தீபம் கல்வி நிலையம்

THEEBAM EDUCATION CENTRE
இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.
(கலைக்கோட்டம் அருகில்)
தரம் 6
- தமிழ் மொழி மூலம்
- ENGLISH MEDIUM

புதிய அனுமதிகள்
விஜயதசமி நன்நாளில்
24.10.2023 செவ்வாய்க்கிழமை முதல்..
"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்" (17511)
அனுமதிகளுக்கு அழையுங்கள் - 0772247781 நிர்வாகி


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... அவர்களது அச்சகத்தில் 22.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org